பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

சேட்டிங் சூட்டிங்
ரேடிமெட் சேட்ஸ்
பிள்ளைகளின் ஆடைகள்
போன்றவற்றிற்கு
நாடவேண்டிய இடம்
கிறவுண்ஸ்
22A, நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ 2/-

Specialist in
WEDDING SARIES
and all other
Requirements in
Textiles
CROWNS
22A, Model Market
JAFFNA,

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆனி 05 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ்தா பிறை 04 ( 19 - 06 - 1988 ) UTHAYAN- A lively Tamil Daily கதிர்: 109

# வடக்கு - கிழக்கு தேர்தலுக்கு ஜூலையில் நியமனப் பத்திரம்?

## இலங்கை -- இந்திய அதிகாரிகள் மட்டத்தில் உத்தேச நிர்ணயம்

கொழும்பு, ஜூன் 19

வடக்கு, கிழக்கு மாகாணசபைகளுக்கான தேர்தல்களை நடத்தும் பொருட்டு, ஜூலை இரண்டாம் வாரத்தில், நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்ய ஏற்பாடாகலாம்.

வடக்கு, கிழக்குத் தேர்தல்களுக்கு, வேட்பாளர் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யும் நாளாக ஜூலை ஒன்பதாம் திகதியை இலங்கை, இந்திய அதிகாரிகள் உத்தேசமாக நிர்ணயித்திருப்பதாக மிகவும் நம்பிக்கையாக அறிய வருகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தேர்தலை நடத்தக்கூடிய சூழ்நிலை இம்மாத முடிவுக்குள் ஏற்பட்டுவிடும் என்று இந்தியத் தரப்பில் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே—

நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்யும் திகதியாக ஜூலை ஒன்பது உத்தேசமாக நிர்ணயிக்கப்பட்டதாக அறியவருகிறது.

இலங்கை அரசின் உயர் மட்டத்தினரும், இந்தியராஜதந்திர அதிகாரிகளும் கலந்துகொண்ட ஒரு சந்திப்பில், உத்தேச நியமனத் திகதி நிர்ணயிக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

எனினும் நிலைமையைப் பொறுத்து உத்தேச முடிவிலும், திகதியிலும் மாற்றம் செய்யப்படும் சாத்தியம் உருவாகலாம் எனவும் சொல்லப்பட்டது.

இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இந்திய "றோ" அதிகாரிகளுக்கும் இடையில் நடக்கும் பேச்சுவார்த்தைகளில் இணக்கம் காணப்பட்டதாகச் செய்திகள் வெளிவருவதற்கு முன்னரே, நியமனப்பத்திர நாளாக ஜூலை ஒன்பதாம் திகதி உத்தேசமாக நிர்ணயிக்கப்பட்டுவிட்டதாக அறிய வந்தது.

இம்மாத இறுதிக்குள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணக்கம்காணப்பட்டுவிடும் என்ற நம்பிக்கையை இந்தியா வெளியிட்டிருந்ததாகவும்— அதனைத் தொடர்ந்தே திகதி உத்தேசமாக நிர்ணயிக்கப்பட்ட

[ 8 ஆம் பக்கம் பார்க்க ]

### முச்சந்தி முரளி



ஓ. அப்ப, வி. பி. சிங்கரும் சிங்கமாய்த் தான் நிக்கிறார் எண்டு சொல்லுங்கோ பின்னை ......!

## ஈழத் தமிழர் பிரச்சினையில் ஆக்க நடவடிக்கைகள்

### கோவையில் ராஜீவ்

கோயம்புத்தூர், ஜூன் 19

ஈழத்தமிழர் பிரச்சினையில் ஆக்கபூர்வமான சில நடவடிக்கைகள் இப்போது எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி நேற்று கோயம்புத்தூரில் வைத்து இப்படித் தெரிவித்தார்.

ஈழத்தமிழர் பிரச்சினையின் தற்போதைய நிலை என்ன? என்று செய்தியாளர் ஒருவர் பிரதமர் ராஜீவிடம் கேட்டார்.

அதற்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் பற்றி பிரதமர் சொன்னதாவது:—

தேர்தல் திகதியை நிர்ணயிப்பதை தேர்தல் கமிஷன் தான் தீர்மானிக்க வேண்டும்.

எந்தக் கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து போட்டியிடுவது என்பது பற்றி காங்கிரஸ் இன்னும் யாருடனும் பேச்சுக்கள் நடத்தவில்லை

இடைத்தேர்தல் முடிவுகள் பற்றிய கேள்விக்குப் பதிலளிக்கையில்,

"தேர்தல் முடிவுகள் காங்கிரஸுக்கு ஒட்டுமொத்தமாகத் திருப்தி அளிக்கின்றன" - என்று குறிப்பிட்டார்.

(ஒ-எ)

### சுபநேரம்

19—6—1988
ஆனி — 5
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
8.54 முதல் 10.24 வரை
ராகுகாலம்:
4.24 முதல் 5.54 வரை

## வவுனியாவில் அடகுநகை விநியோகம் விரைவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

வவுனியா மாவட்டத்தில் அடகு நகை விநியோகம் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான அடகு நகை விநியோகமும், அடுத்த மாதம் அளவில் ஆரம்பிக்கப்படும்.

முதற் கட்டமாக வவுனியா மாவட்டத்தில் அடகு நகை விநியோகிக்கப்படும்.

இத்தகவலை வடபிராந்திய மக்கள் வங்கி முகாமையாளர் உதயனுக்குத் தெரிவித்தார்

யாழ்ப்பாணத்துக்கான நகை விநியோகம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுதே ஏனைய மாவட்டங்களுக்கும் அடகு நகை விநியோகிக்கப்படும்.

இதற்கான சகல நடவடிக்கைகளையும் மக்கள் வங்கி நிர்வாகம் மேற்கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

(ஒ-10)

## வீடு வீடாகச் சென்று அமைதிப் படையினர் துண்டு பிரசுர விநியோகம்

இந்திய அமைதிப் படையினர் நேற்று நகரின் பல பகுதிகளிலும் சிறு துண்டுப் பிரசுரம் ஒன்றை வீடு வீடாகச் சென்று விநியோகித்தனர்.

"அமைதிக்கும் நல் வாழ்வுக்குமானசான்று" என்ற தலைப்புடனான அந்தத் துண்டுப் பிரசுரத்தில் தேர்தலுக்கு ஆதரவளிக்கக் கோரும் கூடார்த்தச் சித்திரம் ஒன்றும் காணப்பட்டது.

துண்டுப் பிரசுரத்தின் ஒரு பக்கத்தில் பின்வருமாறு காணப்பட்டது:—

"இந்தச்சான்றை நீங்கள் வைத்திருப்பீர்களானால் உங்களுக்கு எங்களது உத்தரவாதம்:-

1. பொது மன்னிப்பு 2. பாதுகாப்பு மற்றும் பாதுகாவல். 3. மறுவாழ்வு. 4. மரியாதை மற்றும் பெருந்தன்மை 5. குடும்ப வாழ்க்கை

இந்தச் சான்றுடன் உங்கள் அருகாமையில் இருக்கும் அமைதிப் படை முகாமுக்குச் செல்லுங்கள்."

இந்தத் துண்டுப் பிரசுரத்தில் பல எழுத்துப் பிழைகளும், எழுத்துக்கள் உறுப்பாக எழுதப்படாமலும் உள்ளன.

(அ-51)

### கைதடி சிறுவர் இல்லத்திலிருந்து காணமற் போன சிறுவன் எங்கே?

### பழ வியாபாரி தேடப்படுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 19

கைதடி அநாதைச் சிறுவர் இல்லத்தில் இருந்து இரு சிறுவர்கள் காணாமல் போயிருந்தனர். அவர்களில் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டார். மற்றைய சிறுவனை கண்டுபிடிக்க பழ வியாபாரி ஒருவர் தேடப்படுகிறார்.

சம்பவம் பற்றி அறிய வருவதாவது:-

கடந்த 11 ஆம் திகதி கைதடி அநாதை இல்ல விடுதியில் இருந்து ச. முருகதாஸ் (வயது10) என்ற சிறுவனும் அவரது சகாவான இளவாலையைச் சேர்ந்த சிறுவனும் அநாதை இல்ல பாடசாலைக்குச் செல்வதாகக் கூறிச் சென்றனர்.

பின்னர் இருவரும் பாடசாலையிலிருந்து திரும்பிவரவில்லை. இதனால் அநாதை இல்ல நிர்வாகிகள் அவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டு எங்கும்கிடைக்காததால் சிறுவர்களின் உறவினர்களுக்கு அறிவித்தனர்.

உறவினரும் தேடும் பணியில் ஈடுபட்டதில்

[8 ஆம் பக்கம் பார்க்க ]

### ஒரு லட்சத்து 10 ஆயிரம் வாக்குகளால்

## வி. பி. சிங் வெற்றி!

புதுடில்லி, ஜூன் 19

அலஹபாத் நாடாளுமன்ற இடைத் தேர்தலில் முன்னாள் அமைச்சர் வி. பி. சிங் வெற்றி பெற்று விட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

தேர்தல் முடிவு வருமாறு:-

திரு. வி. பி. சிங் 2, 30,000, திரு. சுனில் சாஸ்திரி (இந்திரா காங்கிரஸ்) 1, 20,000.

மூன்றாவதாக பகுஜன் கட்சித்தலைவர் கான்ஷிராம் வந்தார்.

ஏனைய 65 வேட்பாளர்களும் கட்டுப்பணம் இழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

(ஒ - எ)

### இன்று சித்திரத் தேர் வெள்ளோட்டம்

கோண்டாவில் வடக்கு அருள்மிகு ஸ்ரீ சிவபூதவராயர் கோவில் புதிய பஞ்சதள சித்திரத் தேர் [உள்ளே சிறப்பிதழ்] வெள்ளோட்ட விழா இன்றுஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும்:

காலை பத்துமணியளவில் வெள்ளோட்ட விழா ஆரம்பமாகும்.

(ஒ)

## வடபகுதியில் சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு விரைவில் ஜீப்

வடபிராந்திய சுகாதார அத்தியட்சகர் பிரிவின் கீழ் இயங்கும் சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு வாகனங்கள் [ஜீப்] வழங்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளது

வடபிராந்திய சுகாதார அத்தியட்சகர் பிரிவின் கீழ் ஏழு சுகாதார வைத்திய அதிகாரிகள் இயங்குகின்றனர்.

தற்பொழுது உள்ள சூழ்நிலையில் வாகனங்கள் இல்லாததினால் சுகாதார வைத்திய அதிகாரிகள் தங்கள் கடமைகளை உரிய முறையில் செய்ய முடியாதிருக்கிறார்கள்.

இது குறித்து சுகாதார அமைச்சுக்கு தெரிவிக்கப்பட்டதை அடுத்தே இந்த வாகனங்களை வழங்க சுகாதார [illegible] ளது.

[ஒ-10]

## திருமலை நகரில் சிங்கள வியாபாரிகள் மீண்டும் வர்த்தகம்!

திருகோணமலை, ஜூன் 19

திருகோணமலை நகரிலிருந்து இடம் பெயர்ந்த சிங்கள வியாபாரிகள் பலர் மீண்டும் இங்கு வந்து வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக மத்திய வீதியில் வியாபாரம் செய்த வியாபாரிகளே திரும்பவும் வந்து தங்கள் கடைகளில் மீண்டும் வர்த்தகத்தை ஆரம்பித்துள்ளனர்.

மணிக்கூட்டுக்கோபுரத்திலிருந்து ஆதித்தம் கடைச் சந்திவரையும் உள்ள பகுதியில் அங்காடி வியாபாரிகளும் ஏனையோரும் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அங்கு தமிழ் மக்களும் சென்று பொருள்களைக் கொள்வனவு செய்கின்றனர்.

சேதமடைந்த கடைகளில் கூட தற்காலிகக் கொட்டகைகள் அமைத்து வியாபாரம் நடைபெறுகிறது. மணிக்கூட்டுக் கோபுரத்தடியில் சிங்கள மீன் வியாபாரிகள் மீன் வியாபாரத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

ஏகாம்பரம் வீதி, மத்திய வீதி, டொக்யாட் வீதி ஆகிய பகுதிகளில் சிங்கள மக்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

(ஒ-150)

### படகு கவிழ்ந்து 80 பேர் பலி!

டாக்கா, ஜூன் 19

பங்களாதேஷில் நேற்று படகு ஒன்று கவிழ்ந்ததில் 80 இற்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

தெற்குப் பகுதியில் மக்னு ஆற்றில் பயணிகளுடன் சென்று கொண்டிருந்த படகு ஒன்று புயலில் சிக்கி மூழ்கியது என்று டாக்கா பொலீஸார் அறிவித்தனர்.

படகில் சென்றவர்கள் பற்றி எதுவித தகவலும் கிடைக்கவில்லை என்று பொலீஸார் தெரிவித்தனர்.

(ஒ-எ)

### செவ்வாய் தேசிய தொழிற் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 19

நிர்மாணத்துறையிலான தேசிய தொழிற் பரீட்சை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகின்றது.

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் ஜூலை மாதம் 3ஆம் திகதிவரை பரீட்சை நடைபெறும்.

கடந்த வருடம் செப்டெம்பர், அக்டோபர் மாதங்களில் நடைபெற

[8 ஆம் பக்கம் பார்க்க]

### குண்டுச் சத்தமும் பதற்றமும்

வடமராட்சி, ஜூன் 19

வல்லைவெளிப் பக்கமாகக் கேட்ட இரண்டு பெரிய குண்டு வெடிப்புச் சத்தங்களைத் தொடர்ந்து வடமராட்சி மக்கள் பதற்றம் அடைந்தனர்.

1987 ஆம் ஆண்டு ஜூலை அசம்பாவிதங்களின்போது புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளை தாங்கள் வெடிக்க வைத்ததாக அமைதிப் படையினர் மக்களிடம் தெரிவித்தனர்.

அதைத் தொடர்ந்து அங்கு நிலவிய பதற்றம் தணிந்தது.

(ஒ - சு - 160)

## யாழ். பஸ் நிலையத்தில் வீதிமறிப்பு, பொதுக்கூட்டம்

### வெள்ளிக்கிழமை நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தை அண்டிய வீதிகளில் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வீதி மறிப்புநடவடிக்கைமேற்கொள்ளப்படும். அதனைத் தொடர்ந்து பொதுக் கூட்டம் ஒன்றும் இடம்பெறும்.

யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை, சமாதானம் என்பவற்றை வலியுறுத்தி இப்போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை வடக்கு, கிழக்கு பொது ஸ்தாபனங்களின் மன்றம் செய்து வருகிறது.

பிரஸ்தாபமன்றத்தின் பணிமனையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில்இப் போராட்டத்திற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் அன்னையர் முன்னணி, வடக்கு, கிழக்கு பிரசைகள் இணைப்புக்குழு, பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழு, மனித உரிமைகள் வெகுஜன இயக்கம், சனசமூக நிலையங்கள், சமய ஸ்தாபனங்கள் என்பவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

"தமிழ்ப்பகுதிகளில் பதற்றமும் அமைதியின்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## நிதி நிறுவனங்கள்மீது தீவிர கண்காணிப்பு

### யூ.ரி.ஐ.செயற்பாடு இடை நிறுத்தம்

கொழும்பு, ஜூன் 19

நிதி நிறுவனங்களின் செயற்பாடுகள், கணக்குகளை மிகத் தீவிரமாகவும், நுணுக்கமாகவும் கண்காணிக்க இலங்கை மத்திய வங்கி முடிவு செய்திருக்கிறது.

பொது மக்களின் முதலீடுகளை ஏற்றுக்கொள்ளும் நிதிநிறுவனங்கள் அவற்றை உரிய முறையில் கையாளுகின்றனவா என்பது குறித்தே இலங்கை மத்தியவங்கி அதிக நுணுக்கமாக ஆராய்ந்து வருகிறது.

சந்தேகத்துக்குரிய முறையில் செயற்படும் நிதிநிறுவனங்களை உடனடியாக கண்காணித்து தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு பொது மக்களின் வைப்புகளை பாதுகாக்கும் தனது செயற்பாட்டை மத்திய வங்கி தற்போது முடுக்கி—

8 ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★சின்னஞ் சிறு விளம்பரம்★

சகல விதமான றேடியோ, வீடியோ டெக், T.V ஆகியவற்றில் உதிரிபாகங்களை [வீடியோ Head I.C ரான்சிஸ்டர், அன்ரனா பூஸ்டர் ஆகியவற்றை] மலிவான விலையில் நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள்R.V சென்ரர், F. 6 முதலாவது மாடி, நவீனசந்தை, யாழ்ப்பாணம். (4234)

பேக்கரி ஒன்று கட்டுவதற்குரிய சகல கட்டடப் பொருட்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். சின்னமணி வாலை அம்மன் சோலையில் தெற்கு வீதி, திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பாணம். (4664)

இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. தொடர்பு S. மனோகர் 80/11 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் ஒரு கோழி ரூபா 50 (சுத்தம் செய்து தரப்படும்.) (4669)

பார்சல் கட்டக் கூடியதும் பாடசாலைப் புத்தகம் கொப்பி சிறந்த முறையில் கலர் போடுவதற்கும் ஏற்ற பேப்பர் விற்பனைக்குண்டு. ஸ்ரீசண்முகநாதன் அச்சகம் 340 K. K. S வீதி, யாழ்ப்பாணம். (4486)

Indra Aqua வண்ண மீன்களும் கண்ணாடித் தொட்டிகளும், தொட்டி உபகரணங்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு A. C. ராஜக்கோன், 28 மத்திய மேற்கு வீதி (குருநகர் தண்ணீர்த் தாங்கிக்கு அருகாமை) குருநகர். (4482)

நல்ல இன S.T அல்சேஷன் இரண்டுமாதக்குட்டியும் வெள்ளை நிற பொமனேறியன் ஆண் குட்டியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குளி. (C5498)

Honda Charly 3 Speed Automatic ஓடுவதற்கு லேசானதும்charly சாதாரணமும் Honda sports 50 CC விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 7 நிக்கிலஸ் ஒழுங்கை, சச்சேரி நல்லூர் வீதி, சுண்டுக்குளி. [4476]

எம்மிடம் கொண்டா, C50, C90, HAO 2,C90, MD70,MB 5,RACOON GS 125,[new brand]CB-250 எலக்ரோனிக் மோட்டார் சைக்கிள்கள், பல நிறங்களில் மொத்தமாக அல்லது சில்லறையாக பெற்றுக்கொள்ளலாம். சோயில் பொருட்களும், பித்தளை, செப்பு, அலுமினியம், எவர்சில்வர் பொருட்களும் விநியோகஸ்தர்கள். லம்ஸ் மெற்றல்ஸ்ரோர்ஸ் 26/B மானிப்பாய் வீதி, கிளை 76/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [4671]

பாவித்த விட்டுத்தளபாடங்கள் மகாராஜா ஹோல்செற் நாஷனல் கறுப்பு- வெள்ளை T. V சசற்றேடியோ, சாப்பாட்டு மேசை, கதிரை கட்டில் சியஸ்ரா மெத்தைகள் Oven எம்பளம் 12' x 8' சைஸ், Show case கண்ணாடிமேசை புத்தக அலுமாரி, சிறிய, பெரிய கபேட், Fan மற்றும் பல பொருட்களும் மிகமலிவு விலையில் உண்டு. M. தியாகராஜா 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென்பற்றிக் சந்தியருகில்) (4458)

SITUATIONWANTED I. C. M. A. Part. I Qualified SeeksAccountant / Asst Accountant Post. Contact R.Ranganathan. C/o S Subramaniam Valai Amman Kovil, south, Thirunelvely East Jaffna. (4665)

## தேவை

யாழ். நகரிலிருந்து சுமார் 80 மைல் தூரத்திலுள்ள தென்னந்தோட்டத்தில் இருக்கும் உரிமையாளருக்கு, சமையல் செய்து கொடுப்பதற்கு அனுபவம் உள்ளவர் தேவை. (கணவன்/ மனைவியாகவும் இருக்கலாம். விவரங்கள் நேரில். கதைக்கலாம் தொடர்பு C/o 236 உதயன் யாழ்ப்பாணம். C/5487

சொப்பிகள் கட்டுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை. பழையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மிக் இன்டஸ்றிஸ் 26, 76/1, திருநெல்வேலி சிவன் புது வீதி, யாழ்ப்பாணம். காலை 8 மணிக்கும் 9 00 மணிக்கும் இடையில் நேரில் வரவும், (4422)

(1) சமயற்காரர் -4 சம்பளம் உணவுடன், (2) Waiters(3) கணக்காளர் (4) விகிதர் ஆண்/பெண் உட்பட (35 வயதுக்குட்பட்டவர்) வேலை பயில விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி 'Grill Inn [G. P. P. Tourist Restaurant, 80, பலாலி ரோட் திருநெல்வேலி. 4662)

## மணப்பெண் தேவை

44 வயதுடைய விரிவுரையாளர், பொறியியலாளர், பங்காளர் ஆகியவருக்கு பிற்கால பராமரிப்புக்கு ஏற்ற 40 வயதுக்கு கீழ்ப்பட்ட தொல்லைகள் அற்ற பெண் தேவைப்படுகின்றது. விரும்பியவர்கள் புகைப்படம்விபரம் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்கலாம். திருப்திப்படாதவற்றை திருப்பி அனுப்பப்படும். விளம்பர இல. 164 மே/பா உதயன் யாழ்ப்பாணம். (4478)

## புதிய வெளியீடு

புதிய வெளியீடுகள் விற்பனையாகின்றது. 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசிற் பரீட்சையில் திறமைச் சித்தி பெற அரிய வழிகாட்டிப் பயிற்சியும் கட்டுரைகளும் அடங்கிய புதிய பதிப்பு கு.வி அச்சக வெளியீடு ஞானசுரபி புத்தகக் கம்பனி, யாழ்ப்பாணம். (C4905)

## சோதிடம்

இன்று வியாழ மாற்றமும் எல்லா இராசிகளின் பலன்களும் தமிழர்களின் மேடராசிக்கு சுபீட்சமும் தென்னிலங்கை ராசி குடும்பத்திற்கு தீமைகளும் தொடரும். விலை ரூபா 3/50 எங்கும் கிடைக்கும். சத்தியதாஸன் [ஆத்மசோதி ஆசிரியர்] கமலா வோச் வேக்ஸ் காங்கேசன்துறை (4672)

## காணவில்லை

சென்ற 22 ஆம் திகதி ஞாயிறு அச்சுவேலிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் DL 470217 இலக்க சாரதி லைசென்சும் சுசிக்கி மோட்டார் சைக்கிள் பின் மூடியும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து புதிய இல:127, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அறிவித்தல் தந்தால் வந்து பெற்றுக்கொள்வேன். சன்மானம் வழங்கப்படும். (4670)

## தொழிற்கல்வி

வெளிநாடுகளில்இலகுவில் தொழில்பெற Telex I.D.D. Operators (International) இருபாலாரும் Radio officer (ship) P. M. G Electronics Air -condition & Refrigraation Electrical wiring அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படும் பதிவுகள் உடன் ஏற்றுக்கொள்ளப்படும். விபரங்களுக்கு Electronic Engineer keen centre Palaly Road, Thirunelvely. (4477)

## விற்பனைக்கு

நஷனல் Akai J. V. C வீடியோ டெக்கிற்கான கெட் பெல்ற், மோட்டார், I.C கள் நஷனல், சொனி, ரெலிவிஷன், ரியூப் ரியூனர், Fly Back I.C ஓடியோ பெல்ற், கெட் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம், மொத்தமாக பெறுவோருக்கு விஷேட கழிவு வழங்கப்படும். விபரங்களிற்கு Jaffna Technical Institute, ஸ்ரான்லிவீதி, (றெயில்வே கடவை அருகாமை) யாழ்ப்பாணம். (C.5492)

## கோழிக்குஞ்சு

ஒரு நாள் [கிஸ்டம்பர் கோல்டன் கொமற் குஞ்சுகள், செற்ற பாம் B380 பக்கொக்குஞ்சுகள் கறுப்புச் சேவற் குஞ்சுகள், 17-6-1988ல் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவுசெய்யவும். இடங்கள்(1) R.S.K. Farm முருகபதி உடுவில் (2) குபேரன் ஸ்ரோர்ஸ் சொக்குவில் சந்தி சொக்குவில். (4248)

Hisex Golden Comet பிறவுன் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், Hy - Line வெள்ளை, கறுப்பு பேட்டுக்குஞ்சுகள் Hybro புரொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா அன் பிறதர்ஸ் பிரம்படிலேன் சொக்குவில். (4151)

Lohmann வெள்ளை சிகப்பு பேட்டுக்குஞ்சுகள் புரொயிலர் குஞ்சுகள், Golden Comet சிகப்பு பேட்டுக்குஞ்சுகள் சேவல் குஞ்சுகள், Hy Line வெள்ளை கறுப்பு பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமையிலும் விநியோகிக்கப்படும், உடன் முன் கூட்டியே பதிவு செய்யவும் Nallur Farm Centre. C/o, நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசன் லேன் நல்லூர். (4074)

Broilor இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: Nallur Farm Center, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசன் லேன், நல்லூர். (4073)

## கல்வி

ICMA/ AAT/ I. A. B/ Computer Programing வகுப்புகள் இப்பொழுதுதான் ஆரம்பமாகியுள்ளன, School of Business Administration 16, 3ம் குறுக்குத் தெரு, [O.L.R தேவாலயத்திற்கு மேற்குப் பக்கம் யாழ்ப்பாணம். (C5468)

சகல விதமான T. V றேடியோ, பூஸ்டர் அன்ரனு வயர் சுவர் கடிகாரங்கள், சைக்கடிகாரங்கள், மின் விசிறிகள், சைனு மின் அடுப்புகள், T. V ஸ்ராண்ட் றைஸ் குக்கர் மற்றும் எலக்ரிக் வயறிங் பொருட்கள், பெற நாடுங்கள் New City Traders 135, Kasturiar Road Jaffna (C5482)

## TYPE WRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக் கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road Jaffna (Samy & Co Shabra அருகாமையில். (C5300)

## பிறந்ததின வாழ்த்து



### செல்வன் சுதாகரன்

113/3 திருவையாறு கிளிநொச்சியில் வசிக்கும் சிதம்பரப்பிள்ளை தம்பதியினரின் செல்வப்புதல்வன் சுதாகரன் இன்று 19-06-88ல் தனது முதலாவது பிறந்ததினத்தை குதூகலமாக கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அக்காமார், அம்மம்மா மற்றும் உற்றார், உறவினர்கள் யாவரும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புற வாழ வாழ்த்துகிறார்கள். (4300)

## 4 ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 11-6-1920
மறைவு- 4-6-1984
திதி: 19-6-1988

### திருமதி மாணிக்கம் யோகேஸ்வரி

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் எங்களுக்கு ஊன்றுகோலாயிருந்து வழிநடத்தின எம் அன்புத் தெய்வமே. எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்டு நாலாண்டு சென்றாலும் தங்களின் திருவுருவம் எங்கள் நெஞ்சங்களை விட்டு நீங்காது.

உங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டுகிறோம்.

அன்புக் கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், தங்கை.

(4285)

## மனநோயாளி தீமூட்டி தற்கொலை!

யாழ்ப்பாணம், ஜூன் 19

மனநோயாளியான நடுத்தர வயதுடைய ஒருவர் தனக்குத்தானே தீமூட்டித் தற்கொலை செய்துகொண்டார்.

கடந்த புதன்கிழமை இச்சம்பவம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் ஐந்தாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த எஸ்.ஞானப்பிரகாசம் (வயது 55) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவராவர்.

இவரது மரணம் தொடர்பான விசாரணையில் இவர் ஒரு மனநோயாளி எனத் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணையை யாழ். பதில் நீதிவான் திரு. க. கேசவன் நடத்தினார். (ஓ-10)

## ஒரு மாதமாக மூடிக்கிடக்கும் பாடசாலை

தாளையடி ஜூன் 19

வடமராட்சி கிழக்கில் உள்ள பாடசாலை ஒன்று ஒரு மாதத்துக்கு மேலாக மூடப்பட்டு உள்ளது.

ஜீ. சி. ஈ. சாதாரண தர வகுப்பு வரை உள்ள வெற்றிலைக் கேணி பரமேஸ்வரா கனிஷ்ட மகா வித்தியாலயமே இவ்வாறு மூடப்பட்டுள்ளது.

வெளியூர் ஆசிரியர்கள் வாரததே இதற்குக் காரணம்.

இப் பாடசாலையில் கற்கும் ஜீ. சி. ஈ. சாதாரண வகுப்பு மாணவர்கள் பலர் டிசம்பர் மாதம் நடைபெறும் க. பொ. த சாதாரண பரீட்சைக்குத் தோற்ற உள்ளார்கள்.

## அரச லொறி தீக்கிரை!

அரசுக்குச்சொந்தமான லொறி ஒன்று டெடிகம பகுதியில் நெலுந்தெனியா என்னுமிடத்தில் இனந்தெரியாதவர்களினால் எரிக்கப்பட்டது.

## CHARTERED LICENTIATE-I

**SEPT 88 - MARCH 89**

வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன

உங்கள் பதிவுக்கு:-

**North Ceylon Technical Institute**

14, ST. Peter's Lane,
Hospital Road,
Jaffna.

(C5497)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 12- 4- 1920 இறப்பு 1- 7- 1987
திதி- 19- 6- 1988

### அமரர் சீனிவாசகம் ஜெகதீசன்

(ஓய்வுபெற்ற ரெயில்வே பொயின்மென்)

எங்கள் அன்புத்தெய்வமே நீங்கள் எங்களைவிட்டுப் பிரிந்து ஓராண்டாகியும் உங்கள் நினைவு என்றும் அகலாது.

இப்படிக்கு
மனைவி பிள்ளைகள்

அம்மையார்தோட்டம்
உடுவில் கிழக்கு
சுன்னாகம். (4433)

## மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி



### க. க. செல்லத்தம்பி

தோற்றம் 09- 05- 1925 மறைவு 23- 06- 1985

திதி: ஸ்கந்த பஞ்சமி.

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து அன்புடன் ஆதரித்த எம் குலவிளக்கே எம்மை எல்லாம் விட்டு ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு எங்கு சென்றீர்கள் நீங்கள் மறைந்து மூன்றாண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் இதயத்தை விட்டு நீங்கவில்லை ஐயா உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புதுரோட்
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை. 4487



## T. இந்திரநாதன்

# M THREE TRAVELS

அளிக்கும்

மத்திய கிழக்கு வேலைவாய்ப்புகள்

**Ready Mix Concrete Factory**
(திடீர் கலவை கொங்கிறீற் தொழிற்சாலை)

| | இடம் | சம்பளம் றியால் |
|---|---|---|
| 1. விற்பனையாளர் (வாகனசாரதி அத்தாட்சிப் பத்திரத்துடன்) SALESMAN (With Driving Licence) | 2 | 1000 |
| 2. கணக்காளர் (Accountant) (தொழில் நுட்ப கல்லூரி சான்றிதழ் அல்லது சர்வகலாசாலை சான்றிதழ் | 2 | 1500 தொடக்கம் 2500 வரை |
| 3. மின் இணைப்பாளர் (கைத்தொழில்) ELECTRICIAN (Industrial) | 2 | 800 |
| 4. களஞ்சிய பொறுப்பாளர் STORE KEEPER | 2 | 1000 |
| 5. LAB TECHNICIAN (Quality Control) தொழில்நுட்ப ஆய்வாளர் (தொழிற்சாலை) | 2 | 1200 தொடக்கம் 1500 வரை |

கடவுச்சீட்டு (PassPort) கடவுச் சீட்டு முன்பக்கப்பிரதி 10 படங்கள், சான்றிதழ்களுடன் தொடர்பு கொள்ளவும்.

3 வருட ஒப்பந்தம் உணவு இருப்பிட வசதி
உங்கள் தேவை எங்கள் சேவை

தொடர்பு கொள்ளவும்:-

**T. இந்திரநாதன்**
சோதிலேன் கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.
பஸ் வழி: 763, 764, 769. (C 4906)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

போஷாக்குள்ள

# கால்நடை உணவு உற்பத்திக்கு மானியம் வழங்கத் திட்டம்

வேலணை, ஜுன். 19

போஷாக்குக் குறைந்த கால்நடைகளுக்குபோசாக்குள்ள உணவு வழங்கி அவற்றை மக்களுக்கு பயன்பட வைக்கும் திட்டத்தின் கீழ் தீவுப் பகுதியில் ''குளிரப்புக்தீன்'' தயாரிப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது

கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் இப்பகுதியில் கால்நடைகளுக்கான ''குளிராப் புத்தீன்'' உற்பத்தியை வலுவடையச் செய்ய மானியம் வழங்கவிருக்கிறது.

''குளிராப்புத்தீன்'' உற்பத்தியில் ஈடுபடும் கால்நடை வளர்ப்போருக்கு ஆயிரத்து எண்ணூறு ரூபா மானியமாகவழங்க இத் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

12 அடி நீளமும் 6 அடி அகலமும் கொண்ட குளிகளில் ''குளிகாப்புத்தீன்'' தயாரிப்பவர்களுக்கு மானியம் வழங்கப்படவிருக்கிறது.

இப்போசாக்கு உணவு தயாரிக்கும் முறை இப்பகுதி மிருக வைத்தியர்களால் போதிக்கப்பட்டு வருகிறது. [இ-167]

## வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜுன் 19

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா ரத்தினம் மத்திய மகா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

மேற்படி கூட்டம் காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகும்.

(இ-க)

## புனரமைப்பு வேலைகள்

வட்டுக்கோட்டை ஜுன் 19

வட்டுக்கோட்டை விரபத்திரசிவன் கோவில் புனரமைப்பு வேலைகள் சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் நடைபெற்றுள்ளன. (இ 161)

## தளபாடம் பற்றுக்குறை

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலய மாணவர்கள் பலர் தளபாடப் பற்றுக் குறையினால் பெரும் கஷ்டமடைந்து வருகின்றனர். (இ-161)

## தாதிகளுக்கான அலவன்ஸ் அதிகரிப்பு

கொழும்பு, ஜுன். 19

அரச ஆஸ்பத்திரிகளில் பணியாற்றும் தாதிகளுக்கான சகல அலவன்ஸ்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்படுகின்றது.

விவரம் வருமாறு;

★ சப்பாத்து அலவன்ஸ் பழையது: 200 ரூபா. புதியது: 300ரூபா.

★ தையல் அலவன்ஸ்: பழையது: 1[illegible] ரூபா, புதியது: 2[illegible] ரூபா.

★ சலவை அலவன்ஸ்: பழையது: 25 ரூபா புதியது: 50 ரூபா.

★ மேலதிக வேலை நேரச் சம்பளம்: பழையது: 12 ரூபா, புதியது: 17 ரூபா. (இரவு நேரங்களில் கடமைபுரிவதைப் பொறுத்து இது நிர்ணயிக்கப்படும்)

அரசுத் தாதிகள் சங்கம் அதன் தலைவர் வண. முருத்தெட்டுவ ஆனந்ததேரரின் தலைமையில் சுகாதார அமைச்சர் ரஞ்சித் அத்தபத்துவைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியதைத் தொடர்ந்து, புதிய அலவன்ஸ் நிர்ணயிக்கப்பட்டது.

(ஒ-எ)

## புதுப்பொலிவு பெறும் பாடசாலை

யாழ்ப்பாணம் ஜுன் 19

கடந்த வருட அனர்த்தங்களால் சேதமுற்றிருந்தது சோண்டாவில் இந்து மகாவித்தியாலயம் இவ் வித்தியாலத்தின் ஆசிரியர்கள் மாணவர்கள், பழையமாணவர் ஆகியோர் மேற்கொண்ட பெருமுயற்சியால் இப்பொழுது புதுப்பொலிவு பெற்று காட்சி அளிக்கிறது.

26 ஆசிரியர்களையும் 900 க்கு மேற்பட்ட மாணவ - மாணவிகளையும் கொண்டுள்ள இவ் வித்தியாலயம் ஐயர் பாடசாலை என்றும் அழைக்கப்படுகிறது.

(இ 6)

## இன்றையநிலைக்குஏற்ப கலைப்படைப்புகள் உருவாக்க பட வேண்டும்

யாழ்ப்பாணம், ஜுன் 19

இன்றுள்ள யதார்த்த நிலைகளை எடுத்துச்சொல்லக்கூடிய கலைப்படைப்புகள் உருவாக்கப்பட வேண்டும். இதற்கான திறன் இளைஞர்களிடம் தான் இருக்கிறது. அவர்கள் தான் முற்போக்கு கலை இலக்கியங்களை முன்னெடுத்துச் செல்லமுடியும்.

அண்மையில் மாணவர் இளைஞர் பொது மன்றம் 'கல்லறை மேலான காற்று' எனும் கவிதைத் தொகுப்பு ஒன்றை வெளியிட்டது.

கவிதைத் தொகுப்பு வெளியீடும் வியரங்கும் யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரை நிழ்த்திய மாத்தளை இராஜாலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

வடமராட்சியில் இலங்கை இராணுவத்தால் நடத்தப்பட்ட ஒப்பரேஷன் லிபரேஷன் நிகழ்வுகளை மீள நினைவு கூருவதாக அன்றைய நிகழ்ச்சிகள் அமைந்தன.

திரு. இராஜலிங்கம் தனது உரையில் ''போர் முனை கண்டு அஞ்சாத நெப்போலியன் கூட பேனமுனை கண்டு அஞ்சியதாக வரலாறுகள் மூலம் அறிகின்றோம்'' என்றார்.

இவரைத்தொடர்ந்து உரை நிகழ்த்திய 'கபூர் மாஸ்டர்', பாணவர்களாகிய இளைஞர்கள் காலை இளம் சூரியனைப் போன்றவர்கள். இவர்களது எண்ணங்கள் அபிலாசைகள் சமூகத்தின் அங்கத்தவர்களிடம் இருந்து எழுகின்றன என்றார். (இ-5)

## பம்பாய் வெங்காய உற்பத்தியாளருடன் ஆலோசனைக் கூட்டம்

அராலி ஜுன் 19

யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளரும் செயலக அதிகாரிகளும் அராலி பம்பாய் வெங்காய உற்பத்தியாளர்களை நேரில் சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் பற்றிக் கேட்டறிவர்.

எதிர் வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை அராலி மேற்கு வாழை வளவு பகுதியில் இச்சந்திப்பு இடம் பெறும்.

விவசாயிகள் அனைவரும் அங்கு கூடி தங்கள் பிரச்சினைகள் பற்றி மேலதிகாரிகளுடன் கலந்துரையாடி அதிக விளைச்சலைப் பெறுவதற்கு ஆவன செய்யுமாறு அராலி பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கத்தலைவர் திரு. நா. குகராசா அறிவிக்கின்றார்.

(இ-12)


154வது தென் இந்திய யாத்திரைச் சுற்றுலா

தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம், ஆந்திரா மட்றாஸ், பங்களூர், மைசூர், ஊட்டி, திருப்பதி.

ஆவணி பாடசாலை லீவில் 7- 8- 88 தொடக்கம் 20 நாட்கள்.

இடங்கள்: திருச்சி, மதுரை, கன்னியாகுமரி, குற்றாலம், நீர்வீழ்ச்சி, சோடைரோட், கோயம்புத்தூர், நீலகிரி, ஊட்டி, முதுமலைக்காடு, மைசூர், பிருந்தாவனம், பங்களூர், திருப்பதி, திருக்காளஹஸ்தி, திருக்கழுக்குன்றம், மகாபலிபுரம், கருமாரி அம்மன், சிதம்பரம், திருப்புன்கூர், தஞ்சாவூர், மருதமலைமுருகன், முருகப்பெருமானின் ஆறுபடைவீடுகள், பழமுதிர்சோலை, திருப்பரங்குன்றம், பழனி, திருச்செந்தூர், சுவாமிமலை, திருத்தணி, ஸ்ரீரங்கம், திருவானைக்கோயில், சுசீந்திரம், சாமுண்டீஸ்வரி-அம்மன், கன்னியாகுமரிஅம்மன், தஞ்சைப்பெரிய கோயில் மற்றும் பல ஸ்தலங்கள்.

கட்டணம்: கொழும்பு - திருச்சி - கொழும்பு விமானக் கட்டணத்துடன் ரூபா 4700/- மாத்திரமே.

ராஜா டூர்ஸ் 168, ஸ்டான்லிவீதி யாழ்ப்பாணம்.

வி. அமிர்தேஸ்வரராஜா

அதிபர் (சமாதான நீதிபதி)

(Approved by Govt: Tounist Board)

4610


## ஓய்வுபெற்ற அதிபருக்கு பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஜுன் 19

முத்துத்தம்பி மகா வித்தியாசாலையில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற அதிபர் எம். முத்துலிங்கத்துக்கும் அவர்களது பாரியாருக்கும் வித்தியாலய ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் பிரியாவிடை விருந்துபசார விழா ஒன்று நடத்தப்பட்டது.

தற்போதைய அதிபர் திருமதி கே. சிதம்பரநாதன் தலைமையில் விழா நடைபெற்றது.

ஓய்வுபெற்ற அதிபர் ஏழு ஆண்டு காலம் ஆற்றிய நற்பணியைப் பாராட்டி ஆசிரியர்களும், மாணவர்களும் மற்றும் ஊழியர்களும் கவியாகம் பேச்சுக்களாகவும் பாராட்டுரைகளை வழங்கினர்.

(இ)

## விலை அதிகரிப்பு

கோப்பாய், ஜுன் 19

என்றுமில்லாத வாறு வெங்காயத்தின் விலை அதிகரித்து வருகின்றது.

கல்வியங்காட்டுச் சந்தையில் கிலோ 20 ரூபா வரை வெங்காயம் விற்கப்படுகிறது. (இ-72)



அச்சுவாய் மானு சந்தியில் இலங்கை பணம் பொருள் அபிவிருத்திச் சபையின் வடமராட்சி பிராந்திய அலுவலகம், தொழிற்பயிற்சி நிலையம், கற்பகம் கொள்வனவு விற்பனவு நிலையம் என்பனவற்றின் திறப்பு விழாவை இளைப்பாறிய உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. பொன் மாணிக்கவாசகர், இலங்கை பனம் பொருள் அபிவிருத்திச்சபைப் பணிப்பாளர் திரு. எஸ். மாணிக்கம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

அருகில் இலங்கை பனம் பொருள் அபிவிருத்திச் சபை வடமராட்சிப் பிராந்திய அலுவலகப் பொறுப்பதிகாரி திரு. வி. ஜீ தங்கவேல், அலுவலகத்தைத் திறந்து வைத்த இலங்கைப் பனம் பொருள் அபிவிருத்திச் சபைப் பணிப்பாளர் சிவதர்மவள்ளல் திரு. க. கனகராஜா, பனைவளர்ப்போர் அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம், இலங்கைப் பனம் பொருள் அபிவிருத்திச் சபைப் பணிப்பாளர் திரு. எஸ். பாலசிங்கம் ஆகியோரும் காணப்படுகின்றனர். (இ-118)

## சிரமதானம் நட்புணர்வை வளர்க்கும்

ஊகாவற்றுறை, ஜுன் 19

கிராமங்கள் தோறும் சிரமதான முயற்சிகள் நிறைவேற்றப் படுமானல் அவை மக்களிடையே நட்புணர்வை வளர்க்க ஏதுவாக அமையும்.

சுருவில் சனசமூக நிலயத்தின் ஆதரவில் நடைபெற்ற சிரமதான நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய திரு. சி. நடராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சுருவில் புளியங்கூடல் கிராமங்களில் மழைக்காலங்களில் கூடுதலான நீரை வெளியேற்றும் பிரதான வடிகால் ஒன்று இச்சிரமதான தினத்தன்றுவெட்டப்பட்டது.

ஏராளமான இளைஞர்களும் முதியவர்களும் இதில் கலந்து கொண்டனர் (இ-16)

## அஞ்சலிக் கூட்டம்

நெடுந்தீவு ஓய்வூதியம் பெறுவோர் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினரான அமரர் யோ. தோமஸ் நினைவு அஞ்சலிக் கூட்டமும் மரண சகாய நிதி வழங்குதலும் எதிர்வரும் 22 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறும். (இ)

## விவசாயத் துறை ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் பிரதேசம் பற்றிஅறிந்திருத்தல் அவசியம்

மானிப்பாய் ஜுன் 19

விவசாய பாட ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் பிரதேசம் பற்றிய அறிவை பெற்றிருக்க வேண்டும். தம் பாடசாலையின் குறைபாடுகளை அறிந்து நிவிர்த்தி செய்யவேண்டும்.

விவசாய பாட ஆசிரியர்களுக்கான இருநாள் கருத்தரங்கில் உரையாற்றிய யாழ். மாவட்ட விவசாய பிரதிப் பணிப்பாளரும், யாழ். கல்வி திணைக்கள தொழில்நுட்பப்பாட கல்வி அதிகாரியுமான திரு. ச. சுப்பிரமணியம் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ''எதிர் காலங்களில் திணைக்களத்தினால் வழங்கப்படும் பசளை, பொலித்தீன் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்திபாடசாலை விவசாய நடவடிக்கைகளில் ஆசிரியர்கள் ஆர்வம் காட்ட வேண்டும்''

தொடர்மதிப்பீடுகளைப் பயனுள்ளதாக்க ஆசி

(6 ஆம் பக்கம் பார்க்க)





டிஸ்பிரின் துரிதம்

தலைவலி, தடிமல், காய்ச்சல், வலிகள், நோவுகளுக்குத் உடன் நிவாரணம் உங்களுக்குத் தேவை எனவே வேகம் மிக முக்கியம்.

டிஸ்பிரின் கரையக்கூடியது. எனவே அது உடம்பில் வேகமாகச் உறிஞ்சப்பட்டு, நோய் முனைகளை விரைவாகச் சென்றடைந்து. துரித நிவாரணம் தருகிறது.

உலகெங்கும் இலட்சக்கணக்கான மக்கள், வலிகள், காய்ச்சலிலிருந்து துரித நிவாரணம் பெற, நாற்பது வருடங்களுக்கும் மேலாக, டிஸ்பிரினை நம்பி வந்திருக்கிறார்கள் துரிதமான, நிச்சயமான நிவாரணத்துக்கு டாக்டர்கள் அதனைச் சிபாரிசு செய்கிறார்கள். ஏனெனில் டிஸ்பிரின் கரையக்கூடியது.

வலிகளும் காய்ச்சலும் நீடிக்க விடாதீர்கள். துரித நிவாரணத்தை நாடுங்கள். டிஸ்பிரின் பாவியுங்கள்




ஒரு றெக்கிட் அன் கோல்மன் தயாரிப்பு

டிஸ்பிரின் துரித நிவாரணத்துக்கு உலகெங்கும் நம்பப்படுவது

Quest 1325


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# MACK TRAVELS விமான சேவை



## யாழ் மக்களே உங்கள் வேண்டுகோளுக்கிணங்க

- யாழ் - கொழும்பு விமான சேவை லாலிக்கு விசேட போக்குவரத்து வசதியுடன் தினசரி நடைபெறுகிறது.
- ஏமாற்றத்தைத் தவிர்த்து ஆசனங்களை ஒரு கிழமைக்கு முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.
- ஒவ்வொரு பிரயாணிகளும் ஐந்து லட்சம் ரூ ஆவுக்கு காப்புறுதி செய்யப் பட்டுள்ளார்கள்
- உலகில் எந்த நாட்டிற்கும் குறைந்த கட்டணத்தில் டிக்கற், ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்.
- அனுபவம் வாய்ந்த, உத்தியோகஸ்தர்கள் உங்கள் தேவையை பூர்த்தி செய்வார்கள்.
- Confirmation, Reconfirmation & Cancellation of Tickets ஆகியவை செய்து கொடுக்கப் படும்.

# MACK TRAVELS

இல, 8 முதலாம் ஒழுங்கை.

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

[சி-4901]


# ஜூலை ஜீ.சி.ஈ பரீட்சைக்கு விசேஷ அனுமதிக் கார்ட்

## 1987 பரீட்சையில் தோற்றவில்லை என்பதை பரீட்சார்த்திகள் உறுதி படுத்த வேண்டும்

வட்டுக்கோட்டை ஜூன் 19

முன்னர் அனுப்பி வைக்கப்பட்ட அனுமதி கார்ட்டுகள் தற்போது நடைபெற விருக்கும் விசேஷ ஜீ. சி. ஈ பரீட்சைக்குச் செல்லுபடியாகும்.

இவ்விஷேச பரீட்சைக்கான விசேஷ அனுமதி கார்ட்டுகள் பரீட்சைத் திணைக்களத்தால் யாழ்-கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

யாழ்-கல்வித் திணைக்களம் இந்த விசேஷ அனுமதிக் கார்ட்டுகளை பாடசாலைகளுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் விரைவில் அனுப்பி வைக்கவுள்ளது.

விசேஷ பரீட்சைக்குத் தோற்றவுள்ள சகல பரீட்சார்த்திகளும் இந்த விசேஷ அனுமதிக்கார்ட்டில் தாம் இலங்கையில் நடைபெற்ற எந்தப் பரீட்சை நிலையத்திலும் 1987 ஆம் ஆண்டு ஜீ.சி.ஈ சாதாரணதரப் பரீட்சைக்கு முன்னர் தோற்றவில்லை என்று உறுதிப் படுத்த வேண்டும்.

இந்த விசேஷ அனுமதி கார்ட் மூலம் உறுதிப் படுத்தும் பரீட்சார்த்திகளே இந்த விசேஷ ஜீ. சி. ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவார்கள்.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் இப் பரீட்சை பற்றி விளக்கம் அளிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார் என பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் உதயனுக்குத் தெரிவித்தார்.

(இ-161)

## ஆதவன் சஞ்சிகை அறிமுக விழா

யாழ்ப்பாணம் ஜூன் 19

மு. ரவீந்திரனின் 'ஆதவன்' சஞ்சிகை அறிமுக விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறுகிறது.

நல்லை ஆதீனத்தில் நடைபெறும் இவ்விழாவுக்கு திரு. நா. குழந்தைவேலு தலைமை வகிப்பார்.

திரு. க. சொக்கலிங்கம், யாழ். பல்கலைக் கழக உதவி விரிவுரையாளர் திரு. க. நாகேஸ்வரன், புலவர் ஈழத்து சிவானந்தன், அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ், 'நான்' துணை ஆசிரியர் திரு. எஸ். ஜோசப்பாலா ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

(இ-சி)

## விளையாட்டரங்கு

### மென்பந்து கிரிக்கெட்

# அளவெட்டி 'யுத்' சாம்பியனானது

யாழ்ப்பாணம், ஜூன் 19

கந்தரோடை டிஸ்கோ விளையாட்டுக் கழகமும், சுப்பிரமணிய வாசிகசாலையும் இணைந்து நடத்திய மென்பந்து கிரிக்கெட் போட்டியில் அளவெட்டி 'யுத்' விளையாட்டுக்கழக 'ஏ' அணி சாம்பியனானது

இந்த அணி இறுதிப் போட்டியில் ஆனைக் கோட்டை ஐக்கிய கழக அணியை 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஐக்கிய கழக அணி 15 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 69 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அளவெட்டி யுத் அணி 11 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 70 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றியீட்டியது.

(ச)

## காரைநகரில் விளையாட்டு போட்டி

காரைநகர் ஜூன் 9

காரைநகர் ''புதியதோர் உலகம் செய்வோம்'' நூலக வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை ஒருமணிக்கு ஆரம்பமாகின்றன.

(க-73)

## மட்டுவிலில் விளையாட்டு போட்டிகள்

சாவகச்சேரி ஜூன் 19

மட்டுவில் சொந்தணி பாடசாலை வின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் இம்மாதம் 27ஆம் 28 ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றன.

சந்திரபுரம் ஸ்கந்தவரோதய(மட்டுவில்) மகா வித்தியாலயத்தில் சொந்தணி அதிபர் திரு. ஆர். செல்லையா தலைமையில் இப்போட்டிகள் நடைபெறும்.

(இ-31)

## அஜந்தா முதலிடம்

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் அஜந்தா இல்லம் முதலிடம் பெற்றது.

கிரியா இல்லம், கைலாஸ் இல்லம் ஆகியவை முறையே இரண்டாம், மூன்றும் இடங்களைப் பெற்றன. (க-72)

## கனகரத்தினம் இல்லம் சாம்பியனானது

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய இல்ல மெல்வல்லுனர் போட்டியில் கனகரத்தினம் இல்லம் சாம்பியனானது.

சோமசுந்தரம் இல்லம் இரண்டாம் இடத்தையும், அருளம்பலம் இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றன. (க-69)


# பிரித்தானியாவின் அதி உயர்ந்த அரசாங்க விருது பெற்ற தீந்தை கிறவுண்



பிரித்தானிய அரசாங்க விருதை மீண்டும் பெற்றுக்கொண்ட பளிச்சிடும் பல வர்ணங்களையும் நிலையான பெயரையும் பெற்ற கிறவுண் தீந்தை உங்களுக்கு உயர்மட்ட அலங்கார தோற்றத்தை உறுதிப்படுத்துகிறது

விலை ரூபா 24/50 க்கு மேல்.

**ஒரு லீட்டரில் 20 சதுர மீட்டர் பூசலாம்**

- நீண்டகாலம் நிலைக்கக்கூடிய அலங்கார நிறங்கள் 96.
- அசுத்தம், கறை முதலியவற்றை எளிதாகக் கழுவி சுத்தம் செய்யலாம்.
- பிரித்தானிய தரத்திற்கு அமைவாக உற்பத்தி செய்யப் பட்டது
- தீந்தையின் தரத்தில் ஏதும் குறைபாடுகள் காணப்படின் பணம் வாபஸ் பெறப்படும்.

சிலோன் பெயின்ட் இண்டஸ்ட்ரீஸ்
லேடி கதறின் டிறைவ், இரத்மலானை

50 YEARS 1934 1984 Steuart Group

MARSDAN

உன்னத தன்மையையும், மலிவான விலையையும் [illegible]


## விஞ்ஞான பீடம் முதல் அரையாண்டு இரண்டாம் பகுதி விரிவுரைகள் 1987-88

20- 06- 1988 இல் ஆரம்பமாக விருந்த விஞ்ஞானபீட மாணவர்களுக்கான முதல் அரையாண்டுக்கான இரண்டாம் பகுதி விரிவுரைகள் 04-07-1988-ந் திகதியாக பிற்போடப்பட்டுள்ளது.

பதிவாளர்

(C 4903)

## யாழ். பல. நோ. கூ. சங்கம்- வரைவுள்ளது

# வெற்றுச் சாக்கு கேள்வி அறிவித்தல்

எமது சங்கத்தில் 5890 வெற்றுச் சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கு உண்டு. கேள்வி விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் முடிவு திகதி 21- 6- 88 ஆகும். கேள்வி விண்ணப்பங்கள் அரக்கு முத்திரை போடப்பட்டிருத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.

259, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
17- 6 1988

(C 4902)

## யாழ்ற்றன் கல்லூரி, காரைநகர்

# தொண்டர் ஆசிரியர் பதவி

பின்வரும் பாடங்களுக்கான ஐந்து தொண்டர் ஆசிரியர் பதவிகளுக்கு காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி அதிபரினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களைக் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். சொந்தக் கையெழுத்தில் தயாரித்த விண்ணப்பங்கள் 1988-06-27 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக மேலேயுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

01. விவசாயம் 03. சங்கீதம் 05. தமிழ்
02. சமூகக்கல்வி 04. ஆங்கிலம் 06. கணிதம்
07. விஞ்ஞானம்.

படிகள்:-

மாதாந்தம் ரூபா 400/-

ஆகக்குறைந்த கல்வித்தராதரம்:-
க. பொ. த. (உயர்தர) ப் பரீட்சையில் ஒரே முறையில் ஆகக்குறைந்தது 3 பாடங்களாவது சித்தியடைந்திருக்க வேண்டும்.

அதிபர்,
யாழ்ற்றன் கல்லூரி,
காரைநகர்.

4299

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
10 - 10 - 1920

இறப்பு:
11 - 6 - 1986

### திருமதி நடராஜா இராசம்மா

சைவசமயத்தின் ஓர் அணையா தீபம் - நீ
சைவ சமயத்தின் பெருமை தன்னை
உலகுக்கு எடுத்துக் கூற
உருவெடுத்தாய் - நீ
தொண்டர்களுக்கு பெரும் அதிர்ச்சி
தந்து இறைவனடி அடைந்தாய் - நீ
ஆண்டு இரண்டு சென்றாலும்
இறைவனடியில் இருந்து எமக்கு
ஒளி தருவாய் நீ

அன்பு
மக்கள், மருமக்கள். பேரப்பிள்ளைகள்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(4469)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோண்டாவில்வடக்கு அருள்மிகு ஸ்ரீசிவபூதவராயர் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா



## அருள்மிகு ஸ்ரீசிவபூதவராயர் ஆலய மகிமை

இலங்கையின் வடபாலுள்ள யாழ்ப்பாணத்திலே கோண்டாவில் வடக்கில் சிவபூதவராயர் கோவில் அமைந்துள்ளது.

இக்கோவில் எப்போது எந்த ஆண்டளவில் தோன்றியது என்று எவராலும் வரையறுத்துக் கூற முடியாது. இது பற்றி வயதில் முதிர்ந்த பெரியவர்களைக் கேட்டால் அவர்கள் 1900 ஆம் ஆண்டளவில் ஸ்ரீ சிவபூதவராயர் கோவில் ஓலையால் வேயப்பட்ட ஓர் கொட்டிலாக இருந்தது என்றும் அந்தக் காலகட்டத்தில் அப்பாக்குட்டி அவர்கள் பூசை வைத்து வந்தார்கள் என்றும் கூறுவர்.

1920 ஆம் ஆண்டளவில் வளர்ச்சியின் முதற்கட்டமாக கார்த்திகேசு என்பவர் இந்த ஆலய பரிபாலன சபையின் முக்கிய உறுப்பினராக இருந்து சடமை புரிந்து வந்தார்.

அப்போது கோவில் கொட்டிலாகவே இருந்து வந்தது. யாரோ ஒருவருடைய கோழி ஒன்று கோவிலில் முட்டை போட்டது. அதற்கு எவரும் உரிமை கோராதனால் அவர் கோவில் வரவில் வைத்தார். என்றும் முதியோர் கூறி பெருமை அவைர்.

### பலாலி வரை கேட்கும் மணி ஓசை

நிர்வாகம் சிறப்புற்று நடைபெற்ற காலத்தில் ஆலயத்தின் வளர்சிக்கு சுருட்டுத் தொழிலாளர்கள் குறிப்பிடத்தக்க அளவிற்கு உதவி புரிந்தார்கள்.

அவர்களாலேயே கொட்டகைகள்போடப்பட்டு வந்தது என்றும் கூறுவர். இந்தக் காலகட்டத்தில் தான் ஆலயத்துக்கு ஒரு மணி நிறுவப்பட்டது. வேறு எந்தக் கோவில் மணியையும் விட சிவபூதவராயர் கோவில் மணி விசேஷ நாதம் உடையதாக அமைந்தது. அதன்ஓசை பலாலி வரை கேட்கும். எங்கிருந்தாலும் மணி ஓசையைக் கொண்டு இது சிவபூதவராயர் கோவில் மணி என்று தெரியவரும்.

இந்த ஆலயத்தின் பெருமை சிவனுக்கே உரிய வில்வமரம் ஆதிமூலத்திற்கு மிக அண்மையில் இருப்பதும் முருகனுக்கு அண்மையில் ஓர் அரசமரம் விருட்சம் என வளர்ந்து இருப்பதுமே.

வளர்ச்சியின் ஓர் உச்சக்கட்டமாக 1971 இல் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. அடுத்த ஆண்டு மஹோற்சவம் ஆரம்பமானது. கொடிமரம் காலஞ்சென்ற திரு. செ. இராசசிங்கம் அவர்களினால் செய்தளிக்கப் பட்டது. பல மூர்த்திகளின் விக்கிரகங்கள் காலக்கிரமத்தில் செய்து முடிக்கப் பட்டன.

கட்டுத்தேர் ஓடிவந்த காலத்தில் கோவில் நிர்வாக சபையினர் ஓர் சித்திரத் தேர் செய்யவேண்டும் என்று எண்ணினர். அதன்படியே 1983 இல் ஆரம்பிக்கப்பட்டது.

அதனை ஆரம்பித்து வைத்தவர் நிர்வாக சபையின் முக்கிய உறுப்பினரும் பெயர் சுட்டிக் காட்டும் அளவுக்கு ஆல

7-ஆம் பக்கம் (பார்க்க)

## ஈழத்தின் முதலாவது பஞ்சதள சித்திரத்தேர்

சக்கரத்தை அடிப்படையாகக் கொண்டவர்களுள் தேர் சிறப்பு வாய்ந்தது.

இருக்கு வேத காலத்திலேயே தேர் வழக்கில் இருந்து வந்துள்ளது என்பதை சடையாளி போன்ற நுண்ணிய பாகங்கள் வேதசுலோகங்களில் கூறப்பட்டிருப்பதன் வாயிலாக அறிகின்றோம்.

சைவக் கோயில்களை அமைப்பின் அடிப்படையில் மூன்று பிரதான பாணிகளாகப் பிரிக்கலாம். (1) நாகரம் (2) திராவிடம் (3) வேஸரம்.

கோயில் அமைப்பு முறைக்கேற்பவே தேர்கள் செய்யப்படுகின்றன சதுரவடிவமான தேர் நாகரம் எனப்படும்.

எண்கோண வடிவினது திராவிடம் ஆகும்.

வட்டவடிவினது வேஸரம் எனப் பெயர் பெறும்.

அறுகோண வடிவினதான தேரை அந்திரம் எனக் கூறும் மரபும் உண்டு.

தேரின் அமைப்பு தாமரைப் மொட்டுப போன்று அழகுடையதாக இருக்க வேண்டும் என்பது விதி. தேரின் சுவாமி வீற்றிருக்கும்

**த. கருணாகரன்**

தளம் மனிதனது இருதய தாமரையையும் தாமரைப் பொருட்டையும் குறிப்பதாகும்.

கடோப நிஷதத்திலே தேர், குதிரை முதலியன முறையே மனிதனது உடல் புலன்கள் ஆகியவற்றுடன் ஒப்பிடப்பட்டிருக்கின்றன.

தேர் இலக்கணம் 'மானசாரம்'என்னும்சிற்ப நூலில் கூறப்பட்டுள்ளது. தேரின் அடிப்பாகத்திலே பூலோக வாழ்க்கை ஆயவாழ்க்கைசுவர்க்கவாழ்க்கை ஆகியவற்றைச் சித்திரிக்கும் உருவங்களைக் காணலாம்.

எந்தத் தெய்வத்துக்காகத் தேர் செய்யப்படுகின்றதோ அந்தத் தெய்வத்தின் அம்சம் தேரில் பொருந்த வேண்டும்.

இன்னும் தேர் வடிவம் சரீரத்தைக் குறிப்பதாகும் அதில் காணப்படும் சிங்கங்கள் ஆன்மாவின் வெகாருண்யமில்லாத லோப குணத்தையும் பிரபஞ்ச ஆசையையும் விபரீத உணர்வையும். அகங்காரத்தையும் குறிக்கும்.

எட்டு யாழிகள் ஆன்மாவினது. அஞ்ஞானம் அபிமானம், ராகாதி குணம். துக்கம் விடயப் பற்று. பல வித கன்மம் உபாதி அவத்தை என்னும் எட்டுவித அனுபவங்களையும் குறிக்கும்.

கொடிகள் நந்துவத்தைக் குறிக்கும். மணிகள் சாத்திர அறிவினுலுண்டாகும்பாசஞானத்தைக் குறிக்கும். குஞ்சங்கள் வாகுமாலை முதலியன ஆன்மார்க்கள் மனச் சலனத்தினால் ஏழுவகைப் பிறப்பில் எண்பத்து நான்கு லட்சம் யோனி பேதங்களாக மாறிமாறி அடையும் அவத்தையைக்குறிக்கும்

இவ்வாறு கொண்டு உடம்பு முதலிய இவைகளையெல்லாம் ஆன்மா வெறுத்துத் தியானத்தால திருவருளைச் சேர்த்திருக்கும் உண்மைக்கு அறிகுறியாகவும் இரதோற்சவம் ஆலயங்களில் நடை பெறுவதாகுமெனவும் அறிஞர் கூறுவர்,

இவ்வாறு உண்மைப் பொருள் உணர்த்து நிற்கும் மிக்க மகத்துவமுடையது இரதோற்சவம்.

### அரிய தேர்

அகில [illegible] ஞானசிவபூத[illegible]ரின் திருவருளை [illegible]னிட்டு தேர்த் திருப்பணிச் சபையினர் சிற்பசாஸ்திர நிபுணர்களைக் கொண்டு பல லட்சம் ரூபா வரை செலவிட்டுப் புதிதாக அழகிய நாகர மரபில் அமைத்த பஞ்சதள சித்திரத தேரை பக்தியோடு செய்வித்து நிறைவேற்றியிருக்கின்றார்கள்.

இத்தேரை நேரில் பார்க்கும் போது தென்னிந்திய தலங்களின் வனப்புடைய தேர்களின் நினைவு வரும்.

இலங்கையில் அத்தகைய தேர்களை காண்பது அரிது. பார்ப்போர் கண்களையும் உள்ளத்தையும் கவரும்படி இத்தேரை நிருமித்துதவிய கலாகேசரி, கலாபூஷணம் ஆ, தம்பித்துரை அவர்களது மேற்பார்வையில் வேலை செய்த கலாகேசரி கலாலயக் கலைஞர்கள் சைவ மக்களின் பாராட்டுக்கு உரியவராகின்றனர்.

தேர் செய்வதற்கு பொருளுபகரித்த புண்ணிய சீலர்கள் சகல துக்கங்களும் பாவங்களும் நீங்கப் பெற்றவர்களாய் புண்ணிய உலகத்தை அடைவார்கள் என்பது உண்மைநூற்றுணிபு.

## இன்றைய நிகழ்ச்சிகள்

9.45 தேவாரம்.
10.00 மேளக்கச்சேரி.
10.15 வரவேற்புரை.
10.30 தலைமையுரை.
10.45 தேர்த் திருப்பணிச் சபைத்தலைவர் உரை.
11.00 பாராட்டுரை.
11.15 சிறப்புரை, சிவத்தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி தங்கம்மா, அப்பாக்குட்டி அவர்கள்.
11.30 கலாகேசரி, கலாபூஷணம் ஆ. தம்பித்துரையையும், கலாகேசரி கலாலயக் கலைஞர்களையும் கௌரவித்தல்.
11.45 கலாகேசரி, கலாபூஷணம் அவர்கள்.
12.00 வெள்ளோட்டம்.



## எழில் மிகு தேரை வடிவமைத்த சிற்பி

புதுமைமிக்க பஞ்சதளத்தேரை செய்தளித்த கலாகேசரி ஆறுமுகம் தம்பித்துரை கவின்கலைத்துறையில் தம்புகழை நிலைநிறுத்தியவர்.

புகழ்பெற்ற சிற்பாசிரியர் ஆறுமுகத்தின் மூத்த மகனாக இவர் 1932 ஆம் ஆண்டு பிறந்தார்.

ஆறுமுகத்தார், தமக்குப் பெரும்புகழ் தந்த வீரமாகாளியம்மன் கோயில் தேரை உருவாக்கும்போதே, ஒன்பதே வயதான இவ் விளங்கன்று குலவித்தையைப் பயிலத் தொடங்கி

**சோ. பத்மநாதன்**

விட்டது.

பரமேஸ்வராக் கல்லூரியில் உயர்கல்வியும் எஸ். ஆர். கனகசபை

(7 ஆம் பக்கம் பார்க்க)



பஞ்சதளத் தேரை வடிவமைத்த கலாகேசரி தம்பித்துரை அவர்கள்.


# அருள்மிகு சிவபூதவராயர் தேர் வெள்ளோட்ட விழா சிறப்புற வாழ்த்துகிறோம்!

## "தொழிற் பயிற்சி"

## Computer Programming (Basic - Cobal)

★ 60 மணித்தியாலத்திற்குக் குறையாத செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

★ றேடியோ, ரெலிவிசன் றிப்பயறிங்
எல்லா இன றேடியோ, ரெலிவிசன் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும்.
Instructors: T. NIRANGAN, S. NARENDRAN, V. GNANANDRAN

★ வீடியோ டெக் றிப்பயரிங்
எல்லா இன டெக்குகளினதும் திருத்தும் முறை பயிற்றப்படும்.
Instructors: K. RAVIENDRAN, S. SATHTHIYAMOORTHY

★ எலெக்ரிக்கல் வயறிங்
வீட்டுக்கும், தொழிற்சாலைக்கும் உரிய மின்சார வேலைகளும் மின்சார உபகரணங்கள் திருத்துதலும் பயிற்றப்படும்.
Instructors: S. YOGARAjA

★ மோட்டர் றிவைண்டிங்
எல்லா இன மோட்டர்களும் றிவைண்டிங் செய்யப் பயிற்றப்படும்.
Instructors: M. YOGAESWARAN

★ றேடியோ ★ ரெலிவிசன் ★ டெக்
என்பன குறைந்த காலத்தில் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.

★ மோட்டர்கள் ★ ரான்ஸ்போமர்கள்
என்பன குறைந்த காலத்தில் சிறந்த முறையில் றிவைண்டிங் செய்து கொடுக்கப்படும்.

றேடியோ, ரெலிவிசன், டெக் ஆகியவற்றின் சகல உதிரிப்பாகங்கள் மலிவு விலையில் சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

★ T.V. Deck ஆகியவற்றின் Board's ஆகவும் பெற்றுக்கொள்ளலாம்

குறிப்பு:
ஓடர் செய்யப்படும் உதிரிப்பாகங்கள் சிங்கப்பூரில் இருந்து மலிவாக குறுகிய காலத்தில் பெற்றுக் கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:

JAFFNA TECHNICAL INSTITUTE, Stanley Road, JAFFNA.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மன்னாரில் பாதிக்க பட்டோருக்கு

# பனம் கைத்தொழில் பயிற்சி நிலையங்கள்

மன்னார், ஜூன்.19 மன்னார் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் பனம் தும்பு உற்பத்திப் பயிற்சி நிலையம் ஒன்றும் பனை ஓலையின் கைப்பணி பயிற்சி நிலையம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

இத்திட்டத்துக்கென தமிழர் புனர் வாழ்வு நிறுவனம் நாற்பதினாயிரம் ரூபாவை நன்கொடயாக வழங்கியுள்ளது.

ளபனை அபிவிருத்திச் சபையின் உற்பத்திப் பிரிவு இதற்கான பயிற்சி உதவிகளை வழங்கியுள்ளது.

இப் புனர் வாழ்வுப் பயிற்சித் திட்டத்தின் கீழ் நாவற்காடு பகுதியில் ஒரு கைப்பணிப் பயிற்சி நிலையமும், மன்னாரில் ஒரு கைப்பணிப் பயிற்சி நிலையமும், துள்ளுக்குடியிருப்பு என்ற கிராமத்தில் பனம் தும்பு சேகரிக்கும் பயிற்சி நிலையம் ஒன்றும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

பனைஅபிவிருத்திச்சபையின் மன்னார் மாவட்ட வெளிக்கள உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் இந்த பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. (இ-167)

## வெளியார் கொண்டு வரும் மருந்துகளை வாங்காதீர்!

### அத்தியட்சகர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 19 வெளியார் கொண்டு வரும் மருந்துகளையோ, ஊசி மருந்துகளையோ வாங்கிக் கொள்ள வேண்டாம் என்று யாழ்ப்பாணப் பகுதி மருந்துக் கடை உரிமையாளர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வடபிராந்திய சுகாதார அத்தியட்சகர் திரு. என். கனகசபை இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அண்மையில் அரியாலை மருந்துக் களஞ்சியத்தில் இருந்து பெறுமதி மிக்க மருந்துகள் கொள்ளையிடப்பட்டதுதெரிந்ததே.

மருந்துகளுடன் சம்பந்தப்பட்ட, அவைபற்றி நன்கு அறிந்தவர்களே இந்தக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார்கள் எனச் சந்தேகிக்கிறோம்.

வடபகுதி மக்களுக்கென கொண்டுவரப்படும் மருந்துகளை இவ்வாறு கொள்ளையடிப்பது மனிதாபிமானமற்ற தர்மமில்லாத செயல்-

கொள்ளையில் ஈடுபட்டவர்கள் தனியார் கடைகளில் அதனை விற்க முற்படுவார்கள்-

எனவே மருந்துக்கடை உரிமையாளர்கள் அவற்றை வாங்காது சம்பந்தப்பட்டவர்கள் பற்றி சுகாதாரத் திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும்-

இவ்வாறு சுகாதார அத்தியட்சகர் வேண்டுகோள் விடுத்தார்.

## பின்லாந்து பயணம்

அறவழிப் போராட்டக் குழுவின் நிர்வாக இயக்குனர் திரு. க ஜீவகதாஸ் பின்லாந்தில் இம்மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமாகும் சர்வதேச யுத்த எதிர்ப்பாளர் வருடாந்த மகாநாட்டில் பங்குபற்ற பின்லாந்து சென்றுள்ளார். (இ 31)

## விவசாய---

(3ஆம் பக் தொடர்ச்சி)

யர்கள் முயற்சிக்க வேண்டும் என்றார்.

திருநெல்வேலியிலுள்ள பாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற இக் கருத்தரங்கை விவசாய பாடசாலை ஆசிரிய ஆலோசகர்கள் ஒழுங்குசெய்திருந்தனர்.

பாவட்ட விவசாய பயிற்சி நிலைய விவசாய அதிகாரி திரு.ப இராமநாதன் கருத்துரை வழங்குகையில் ''ஒவ்வொரு பாடசாலையிலும் சிறு அளவிலாவது பயிர்கள் பயிரிடப்பட வேண்டும் சிறு சிறுபிரச்சினைகள்ஏற்படினும் அவற்றை நிவர்த்தி செய்து பயிரிடப்படுவது அவசியம்,,என்றார்.

யாழ். மாவட்ட விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் திரு. கே. குணரெத்தினம் நெற்செய்கை பற்றி விளக்கம் அளித்தார். (இ-90)

## ரியூப் பல்புகள்: எச்சரிக்கையாக இருக்க அறிவுறுத்து

கொழும்பு, ஜூன் 19 தரம் குறைந்ததாகக் கூறப்படும் ''புளோராசன்ட்'' (ரியூப்) பல்புகள் இறக்குமதி செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. அவைகுறித்து எச்சரிக்கையாகஇருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ் விளக்குகளைப் பாவிப்பவர்கள் கதிரியக்கத் தாக்குதலுக்கு ஆளாக நேரிடும் என்று மின் ஒளித்துறைநிபுணர் திரு. எஸ். ரணசிங்க எச்சரித்திருக்கின்றார்.

மொரட்டுவ பல்கலைக் கழக விரிவுரையாளராகவும் பணியாற்றும் இவர் கொழும்பில்அண்மையில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் இந்த அபாயத்தை வெளியிட்டார்.

இந்தப் புளோரசன்ட் பல்புகளின்உட்புறத்தில் மூலாம் பூசுதல் சரிவரச் செய்யப்படவில்லை.

அதனால் உள்ளேஇருக்கும் ''அல்ரு வயலற்'' கதிர்களின் வீச்சு வெளியேயும் பரவும் அபாயம் உள்ளது.

சரியான முறையில் பல்பினுள் உட்புற மூலாம் பூசப்பட்டிருப்பின் ''அல்ரு - வயலற்'' கதிர்கள் வெளியே பரவாது. அப்படிப் பூசப்பட்ட பல்புகள் தான்தரமானவை-என்றார்அவர். (ஒ-எ)

## நன்றி நவிலலும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பிதழும்



கைதடியூர்

### திருமதி தங்கம்மா பத்மநாதன்

21-5-88 அன்று சிவபதமடைந்த கைதடியூர் திருமதி தங்கம்மா பத்மநாதன் அவர்களின் இறுதிக் கிரியைகளிலும்,எமது ஆறுத்துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி, மலர் வளையங்கள் அனுப்பியவர்களுக்கும், பல்வேறு விதங்களில் உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் அவர்கள் சுகவீனமுற்றிருந்தபோது அன்புடனும் அக்கறையுடனும்சேவை புரிந்த மருத்துவ நிபுணர்களுக்கும் தாதிமாருக்கும் (குறிப்பா WARD. NO 16 B) மற்றும் ஊழியருக்கும் எமது உள்ளங் கனிந்த நன்றி உரித்தாகுக.

19-6-88 ஞாயிற்றுக்கிழமை கீரிமலையில் நடைபெறும் அந்தியேட்டி கிரியையிலும் 20-6-88 திங்கட்கிழமை வீட்டில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், மகேசுர பூசையிலும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

இங்ஙனம்
பொ.பத்மநாதனும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

மானார்வளவு
கைதடி

(4626)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
28-4-1928

மறைவு:
1-7-1987

திதி:
19-6-1988

அமரர்

### சீனிவாசகம் தியாகராஜா

[யாழ். கச்சேரி ஓய்வுபெற்ற பதிவாளர்]

அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் தங்களின் தூய அன்பினை நினைவு கூர்வதோடு தங்களின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மறவா
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

No. 27, ..., 
கொட்டடி, யாழ்ப்பாணம்.

[4480]


## ஓர் நற்செய்தி

Tomorrow's Building Technology Today..







உங்கள் கட்டிடங்களை

- ✶ (1) விரைவாக கட்டி முடிப்பதற்கும்
- ✶ (2) செலவில் 25% இலாபமடையவும்
- ✶ (3) வெப்பத்தில் இருந்து நிவாரணமளிக்கவும்
- ✶ (4) இக்கற்களைக் கொண்டு கட்டும் கட்டிடங்களுக்கு பூச்சுத் தேவையில்லை.

துவாரக் கற்களை பாவியுங்கள்

தொடர்பு:

அலுவலகம்:
"MultiBloc"
KANAGASTHAN
Atchuvely South,
ATCHUVELY.

தொழிற்சாலை:
North Ceylon Spun Pipes Co.,
155th Mile, Kandy Road,
KILINOCHCHI

[C-5486]


## புதன் கிழமை சம்பவம்: சாளியபுரவில் வைத்து சீருடை அணிந்தவர்கள் கொள்ளை!

### பஸ் சாரதி தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 19 ஆயுதம் தாங்கிய, சீருடை அணிந்த சிலரே கடந்த புதன் இரவு கொழும்பிலிருந்து- யாழ். நோக்கி வந்த பஸ்ஸை கொள்ளையிட்டனர்.

இவ்வாறு சம்பவத்தில் சிக்கிய மினி பஸ் சாரதி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

சம்பவதினமான புதன் இரவு எமது மினிபஸ் கொழும்பிலிருந்து யாழ் நகர் நோக்கி பயணம் மேற்கொண்டிருந்தது. அதிகாலையளவில் எமது பஸ் அநுராதபுரத்தை அடுத்து சாளியபுர பகுதியில் சென்று கொண்டிருந்தது.

அப்போது எமக்கு முன்னால் சென்ற மினி பஸ் ஒன்று இராணுவ சீருடை அணிந்தவர்களால் மறிக்கப்பட்டன.

''சோதனைக்காக இராணுவத்தினர் வாகனங்களை மறிக்கிறார்கள் என எண்ணி நாம் வாகனங்களை அவ்விடத்தில் நிறுத்தினோம்.

அடுத்து ஆயுதந் தாங்கிய அந்த சீருடைக் கோஷ்டியினர் எமக்கு முன்னால் சென்ற மினிபஸ்ஸில் கொள்ளையில் ஈடுபட்டனர்.

அந்த பஸ்ஸில் இருந்த சிலரிடம் பல ஆயிரம் பெறுமதியான பணமும், டெக் என்பனவும் அபகரிக்கப்பட்டதை அடுத்து எமது பஸ்ஸில் பயணம் செய்தோர் தமது பணம், நகை என்பவற்றை பல இடங்களிலும் மறைத்து வைத்து விட்டனர்.

தொடர்ந்து எமது பஸ்ஸில் ஏறிய கொள்ளையர் எமது பயணிகளிடம் பெறுமதியான உடைமைகள் இல்லாததால் அவர்களிடம் இருந்தமிச்ச சொச்சத்தை அபகரித்தனர். இவ்வாறேஎமக்கு அடுத்து வந்த ஒரு பஸ்ஸிற்கும் நடைபெற்றது.

இந்தக் கொள்ளையர் தமிழிலேயே உரையாடினர். எனினும் அவர்கள்பேசியது கொச்சைத் தமிழாகவே இருந்தது அவர்கள் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்றே கணிக்க வேண்டி இருந்தது-

என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## மகாஜன வித்தியாலயத்தில்

ஆவரங்கால் மகாஜன வித்தியாலய இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் இம்மாதம் 24 ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும். (இ-11)





ரெட் ஸ்டார்

# வீடெம்

600 சக 400

(எம், சி. பீ. ஏ 60% சக 40%)

ரெட் ஸ்டார் வீடெம் 600 சக 400 நெற்பயிருடன் போட்டியிட்டு வளரும் அகன்ற இலைகளாகிய கிடச்சி, புளியாரி, நீர்கோவா ஆகியவற்றையும் சிறுகோரை, சந்தணகோரை, பன் ஆகியவற்றையும் கட்டுப்படுத்தும். நெல் விதைத்து 21 நாட்களுக்கும் 42 நாட்களுக்கு மிடையில் தெளித்தால் சிறந்த பலனடையலாம்.

வீடெம் 400 ரூ 41/50ம் அதற்குமேலும்

வீடெம் 600 ரூ 19/50ம் அதற்குமேலும்

எச்சரிக்கை!- எல்லா பீடைநாசினிகளும் அபாயகரமானவை கவனமாக கையாளவும்.

அங்லோ-ஏஷியன் பேர்ட்டிலைசர்ஸ் லிமிட்டட்
சாற்றட் வங்கி கட்டிடம், கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

தொகச்சொல்லித் தூவாத நீக்கி [redacted] நகச் சொல்லி [redacted]

நன்றி பயப்பதாம் தூது

**பொருள்:**

கற்பனை கற்று, பிறருடைய பகையான பார்வைக்கு அஞ்சாமல், கேட்பவர் உள்ளத்தில் பதியுமாறு சொல்லி, காலத்திற்குப் பொருத்தமானதை அறிகின்றவனே தூதன்.


# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22072
19-06-1988 த. பெ. இல. 22


## சமூக நீதி மலருமா?

அரியாலையில் உள்ள யாழ். மாவட்ட மருந்துக் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான மருந்து வகைகள் சொள்ளை இடப்பட்டுவிட்டன.

இலங்கை முழுவதிலுமே மருந்து விலைகள் அளவுக்கு அதிகமாக உயர்ந்து சென்றுவிட்டன. சிவில் நிர்வாசம் சீர்குலைந்து, வழமைநிலை இல்லாத தமிழ்ப்பகுதிகளில் மருந்து வகைகள் யானைவிலை, குதிரை விலை என்றுகூட இல்லாமல் வானளவுக்கு உயர்ந்து நிற்கின்றன.

இத்தகைய ஒரு இக்கட்டான சூழ்நிலையில், அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கும் போதிய அளவு மருந்துவகைகள் கொழும்பிலிருந்து கிடைப்பதில்லை. அங்கிருந்து பெயருக்கு வந்துசேரும் மருந்துகளை வெகு சிக்கனமாகப் பாவிக்கவேண்டிய நிலையில் ஆஸ்பத்திரி நிர்வாகிகள் கஷ்டப்படுகிறார்கள்.

ஆஸ்பத்திரிகளுக்கு விநியோகிக்கப்படும் மருந்துகளைக் கொள்ளையடித்தால் நஷ்டம் யாருக்கு? பணவசதி இல்லாத ஏழை மக்கள் மருந்தில்லாத காரணத்தால், நோய் தீர்க்க முடியாமல் அவதிப்படுவார்கள்.

அந்த வேதனையைப் பணம்தேடும் நோக்குடன் கொள்ளை அடித்தவனால் புரிந்து கொள்ள முடியாது என்பது உண்மைதான்.

ஏனைய சாதாரண கொள்ளைகளைவிட மருந்துக்கொள்ளை பாவமானது. அதிலும் ஆஸ்பத்திரி மருந்தைக் கொள்ளை அடிப்பது அழியாப் பாவம் உடையது — மகா பாவச் செயல்.

எத்தனையோ ஏழை, எளிய மக்களின் நோய்தீராமல் அவர்கள் படும் வேதனை, மனிதாபிமானம் சிறிதும் இல்லாமல் மருந்துகளைக் கொள்ளை அடித்தவனைக் கொல்லாமல் கொல்லும் என்பது மட்டும் நிச்சயம்.

மருந்துக் கொள்ளையரைக் கண்டு பிடிப்பது கஷ்டமாக இருக்கலாம். ஆனால் அவர்கள் விற்கும் மருந்தை வாங்குவதில்லை என்று மருந்து வியாபாரிகளும், தனியார் ஆஸ்பத்திரிகளும், வீடுகளில் வைத்தியம் செய்யும் டாக்டர்களும் திடசங்கற்பம் எடுத்துக் கொண்டால், கொள்ளையர்கள் மீண்டும் ஒரு முறை அவ்வாறு செய்ய நினைக்க மாட்டார்கள்.

சமூக விரோதிகளை ஒழிக்க வேண்டுமானால், அவர்களுக்கு ஒத்தாசை புரிபவர்களும், ஆதரவு வழங்குபவர்களும் இல்லாமற் போகவேண்டும்.

சமூகத்தில் உள்ளவர்கள் ஒன்றில் சமூக விரோதியாகவோ அல்லது சமூக விரோதத்துக்கு ஏதோ ஒரு விதத்தில் துணை போகின்றவர்களாகவோ இருந்தால் சமூகம் திருந்துவது எப்படி? சமூக நீதி மலர்வது எங்ஙனம்?

# லண்டனில் மொஸாட் ஊடுருவல் அம்பலம்;
# இஸ்ரவேல் ராஜதந்திரி வெளியேற்றம்!

லண்டன், ஜூன் 18

இம்மாத முடிவில் நாட்டைவிட்டு வெளியேறும்படி இஸ்ரவேல் ராஜதந்திரி ஒருவருக்கும் பலஸ்தீனிய விடுதலை இயக்க அதிகாரி ஒருவருக்கும் பிரிட்டிஷ் அரசு நேற்று உத்தரவிட்டது.

இஸ்ரவேல் உளவுப் படையான மொஸாட் அதிகாரிகள் இரகசியமாக லண்டனில் செயல்பட்டுவந்தது கண்டுபிடிக்கப்பட்டது தொடர்பாக இஸ்ரவேல் ராஜதந்திரி வெளியேற்றப்பட்டார்.

வன்செயல்களைத் தூண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறிப் பலஸ்தீனிய விடுதலை இயக்க அதிகாரி ஒருவரையும் பிரிட்டிஷ் அரசு வெளியேற்றுகிறது.

போட்டி வன்செயல்களுக்குப் பிரிட்டனில் இடம்கொடுக்கப்படமாட்டாது என்று லண்டனில் வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் அறிவித்தனர்.

நாட்டைவிட்டு வெளியேறும்உத்தரவை வழங்கும் முன்னர், லண்டனில் உள்ள வெளியுறவு அமைச்சுக்கு இரண்டு ராஜதந்திரிகளும் அழைக்கப்பட்டிருந்தனர்.

பிரிட்டிஷ் அரசின் நிலைப்பாடு அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. (எ)

## 37 கோடி ரூபா போதைவஸ்து மீட்பு

புதுடில்லி, ஜூன். 18

புதுடில்லிப் பொலீஸார் நேற்று 37 கோடி ரூபா பெறுமதியான கொக்கேய்ன் போதைவஸ்தைக் கைப்பற்றினர் என்று அறிவிக்கப்பட்டது.

## பிரெஞ்சுப் பிரதமர் ராஜினாமா!

பாரிஸ், ஜூன் 18

பிரெஞ்சுப் பிரதமர் மைக்கல் றொக்கார்ட் ராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி மித்தரண்டிடம் சமர்ப்பித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலில் அவரின் சோஷலிசக் கட்சி அறுதிப்பெரும்பான்மையைப் பெறத் தவறியதைத் தொடர்ந்தே அவர் இந்த நடவடிக்கையை எடுத்தார்.

**வெளி உலகில்**

# பாண் கேட்டு தொழிலாளர் பெல்கிரேடில் போராட்டம்!

பெல்கிறேட், ஜூன். 18

பாண் வேண்டும் என்று சோரி ஆயிரக்கணக்கான தொழிலாளர் யூகோஸ்லேவியா நாடாளுமன்றக் கட்டத்தின் முன்னால் நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

செங்கொடிகளைப் பிடித்தபடி தொழிலாளர்கள் ஐந்து மணி நேரம் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

''எமக்கு பாண் வேண்டும்'' ''மக்களிடமிருந்து சூறையாடிய பணத்தைத் திருப்பிக்கொடு'' இக்கோஷங்களை தொழிலாளர்கள் எழுப்பினர்.

உதவிப்பிரதமர் ஒருவர் சமரசம் செய்து வைக்க முன்வந்தபோது அவரைப் பேசவிடாது தொழிலாளர்கள் கூக்குரலிட்டுத் தடுத்தனர்.

150 சதவீத பணவீக்கம் காரணமாக யூகோஸ்லேவியா அரசு கடும் பொருளாதாரச் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது தெரிந்ததே.

இதனால் சம்பள உயர்வு இடைநிறுத்தஞ் செய்யப்பட்டுஉள்ளது.

வழங்கப்படும் சம்பளத்திலும் 30 சதவீத வெட்டு அமுல்செய்யப்படுகின்றது. (எ)

## ஊர் எரியும்போது ...!

பீகிங், ஜூன் 18

கடந்த ஆண்டு மே மாதம் சீனாவில் காடு எரிந்தபோது ஏற்பட்ட பெரிய தீவிபத்தில் 200 பேர் வரையில் உயிரிழந்தனரல்லவா!

அச்சமயத்தில் அரச தீயணைப்புப்படை அதிகாரி ஒருவர், படையின் தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களைக் கொண்டு தனது வீட்டைக் காப்பாற்றினார். அச்செயலுக்காக அவர் மீது சீன நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு விசாரணை முடிவடைந்தது.

இறுதியில் குற்றவாளியாகக் காணப்பட்டஅவருக்கு 5 ஆண்டு சால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அவருடன் கவனக்குறைவாக நடந்துகொண்ட குற்றத்துக்காக வேறு 6 அதிகாரிகளுக்கும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

20 ஆண்டுகளுக்கு முன் இப்படியான குற்றங்களுக்கு மரண தண்டனை தான் விதிக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. (எ)

### இந்தியா முழுவதும்
# அவசரகால நிலைபிரகடனம் பற்றி ஜெயலலிதாவிடம் ராஜீவ் பேசினாரா?

இந்தியா முழுவதும் அவசரகாலச் சட்டத் [illegible] பிறப்பிப்பது குறித்து பிரதமர் ராஜீவ் காந்தி, ஜெயலலிதாவிடம் பேசவில்லை.

தி. மு. க. துணைப் பொதுச் செயலாளர் நாஞ்சில் மனோகரனுக்கு எழுதிய பதிலில் உள்துறை அமைச்சர்பூட்டாசிங் முன்கண்டவாறு தெரிவித்தார்.

'இல்லஸ்டிரேட்டட் வீக்லி' என்ற ஆங்கில வார இதழுக்கு ஜெயலலிதா பேட்டி அளித்தார்.

''இந்தியா முழுவதும் நெருக்கடி நிலையைப் பிறப்பிக்க பிரதமர் ராஜீவ்காந்தி திட்டமிட்டிருந்தார். நான்சொன்னதன் பேரில்தான் பஞ்சாப் மாநிலத்துக்கு மட்டும் என்ற நிலையைப் பிரதமர் எடுத்தார்'' இப்படி ஜெயலலிதா அப்பேட்டியில் கூறியிருந்தார்.

இப்பேட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. சரிதானா என்று கேட்டு நாஞ்சில் மனோகரன் பிரதமருக்குக் கடிதம் எழுதினார்.

பிரதமரின் சார்பில் அக்கடிதத்துக்கு அமைச்சர் பூட்டாசிங் பதில் கடிதம் அனுப்பிவைத்திருக்கிறார்.

இந்திய அரசமைப்புச் சட்டத்துக்குக் கொண்டு வரப்பட்ட 59 ஆவது திருத்தம் பஞ்சாப் மாநிலத்தில் மட்டுமே அவசரகாலச் சட்டத்தை பிரகடனஞ் செய்ய வழி வகுத்துள்ளது. என்றும் அமைச்சர் பூட்டாசிங் தெரிவித்திருக்கிறார்.

## விமான விபத்தில் 21 பேர் பலி!

புவனர்ஸ் அயர்ஸ், ஜூன் 18

விமான விபத்து ஒன்றில் 21 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

ஆஜெர்ன் டீனாவின் உள்ளூர் விமான சேவையில் ஈடுபட்டு வந்த விமானம் ஒன்றே வடகிழக்குப் பகுதியில் சீரற்ற காலநிலை காரணமாக விழுந்து நொறுங்கியது.

### எழுத்தாளர்கள் தீர்மானம்:
# தமிழ் மக்களின் துன்பம் தொடர்வதை சகிக்க முடியாது
## பேச்சு மூலம் தீர்வுகாண வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 19

தமிழ்பேசும் மக்களால் தொடர்ந்தும்அழிவுகளையும் அனர்த்தங்களையும் தாங்கிக் கொள்ளமுடியாது. அவற்றைச் சகித்துக் கொள்ளவும் முடியாது. அது அனுமதிக்கப்படக் கூடியதும் அல்ல. ஆகவே பேச்சு வார்த்தைகள் மூலம் பிணக்குகள் உடனடியாகத் தீர்த்து வைக்கப்பட்டு சகஜ நிலைமை மீளமைக்கப்படவேண்டும்.

இந்த முயற்சிக்கு பிராந்திய சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் முன்னேற்றத்தையும் விழையும் அனைத்து தேசிய – சர்வதேசிய சக்திகளும் உதவ வேண்டும்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கடந்த வாரம் நடைபெற்ற தனது அவசர தேசிய சபைக் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானங்களில் ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறது.

தமிழ் மாநிலத்தில் இன்றைய நிலைமைகளையும் நமது பிராந்தியத்தில் புவி–அரசியல் நிலைமைகளையும் ஆழ்ந்த பரிசிலனைக்கு எடுத்துக் கொண்ட இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கச் செயலாளர் திரு. பிரேம்ஜியால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ ஜூலை 29 இல் செய்து கொள்ளப்பட்ட இலங்கை–இந்தியஉடன்படிக்கை பல்வேறு விமர்சனங்களுக்கு உரியது.

அது தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினைக்கு முழுமையான தீர்வாக அமையவில்லை. எனினும் இது இன்றைய நிலையில் பூரணமாக அமுல்படுத்தப்படுவதையாவது நிச்சயப்படுத்துவதன் மூலம் உடனடிப்பிரச்சினைக்குத் தீர்வும் அவலங்களுக்கு முடிவும் காணப்பட வேண்டும்.

★ தமிழ் மக்களின் சகஜவாழ்வையும்பிராந்தியத்தின் புவி–அரசியல் நலன்களையும் கவனத்திற்கொண்டுபிணக்கிற்கு உடனடியான அரசியல் தீர்வினைக்காண உசிதமான அனைத்து வடிவ, அனைத்து மட்ட முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறு பிராந்திய சமாதானத்திலும், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் நலனிலும், ஜனநாயகத்தின் வலுப்பாட்டிலும் அக்கறையுள்ள எல்லா தேசிய, சர்வதேசியசக்திகளையும் கேட்டுக் கொள்கிறோம்.

★ எந்த ஒரு விடுதலைப் போராட்டத்தினதும் இயல்புக்கும் மெய் நலனுக்கும் ஏற்றவகையில் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணயப் போராட்டம், ஜனநாயக உள்ளடக்கத்தையும் உறுதியான நிலைப்பாட்டையும்மேற்கொள்வதும், இந்த அடிப்படையில் அனைத்துதேசிய விமோசன சக்திகளுடனும் சர்வதேச தொழிலாளி வர்க்க சோஷலிஸ சக்திகளுடனும் ஒருமைப்பாட்டை வளர்த்து வலுப்படுத்துவதும் இறுதி வெற்றிக்கான முன்தேவையாகும்.

மேற்கண்ட தீர்மானங்களும் அவசர கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## மாணவனை பிணை எடுத்த உபவேந்தர்!

கொழும்பு ஜூன் 19

தீவிரவாத சந்தேகநபர் என்று காவலில் வைக்கப்பட்ட பல்கலைக் கழக மாணவர் ஒருவரை பல்கலைக் கழக உபவேந்தரே நீதிமன்றம் சென்று பிணை எடுத்தார்.

கண்டியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

தீவிரவாத சுவரொட்டிகளை ஒட்டியது என்ற சந்தேகத்தின் பேரில் பேராதனைப் பல்கலைக் கழக மாணவர் ஒருவர் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

அவர் கடந்த செவ்வாய்க் கிழமை கண்டி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

நீதிமன்றத்தின் அறிவித்தல் இல்லாமலே [illegible] கழக உபவேந்தர் பேரா[illegible] விஜேரா நீதிவான் டட்லி கருணாரத்ன முன் ஆஜராகி, மாணவனைப் பிணை எடுக்க வந்திருப்பதாகச் சொன்னார்.

''இறுதிப் பரீட்சை இம்மாதம் 23 ஆம் திகதி வருகிறது. மாணவன் அப்பரீட்சை எடுக்க வேண்டியுள்ளது,, என்று உபவேந்தர் சொன்னார்.

நீதவான் : மாணவனின் அரசியல் தொடர்பு பற்றித் தெரியுமா?

உபவேந்தர் : அது எனக்குத் தெரியும். ஆனால் அவர் தீவிரவாத நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டிருந்தாரா? என்பது எனக்குத் தெரியாது. சுவரொட்டிகளை ஒட்டியிருக்சக்கூடும்.

உபவேந்தரின் பிணை [illegible] உட்பட [illegible] வேறுமூன்று மாணவர்கள் [illegible] விடுதலை செய்யப்பட்டனர்.

## ஐ. நாவில் நிதிநெருக்கடி; ஊழியர் வெளிநடப்பு!

ஐ. நா. ஜூன்18

ஐ.நா. ஊழியர்களின் சம்பள உயர்வை இடைநிறுத்தி வைக்கும்படி பொதுச் செயலாளர் பெரஸ் டி குயிலர் உத்தரவிட்டார்.

ஐ. நா. நிதிநெருக்கடியில் சிக்கி இருக்கிறது. இதைச் சமாளிக்கப் பொதுச் செயலாளர் எடுத்துள்ள நடவடிக்கைகளில் இதுவும்ஒன்று.

ஊழியர்களின் சம்பள வெட்டுக்கும் அவர் உத்தரவிட்டார்.

13 ஆண்டுகளுக்கு சம்பள உயர்வு நிறுத்தப்பட்டிருக்கும் பொதுச் செயலாளரின் அறிவிப்பை எதிர்த்து ஐ. நா. ஊழியர் கடந்த புதன்கிழமை வெளிநடப்புச் செய்தனர்.

15 நிமிடங்களின் பின்னர் ஊழியர் வேலைக்குத் திரும்பினர். அமெரிக்கா உட்படச் சில நாடுகள் செலுத்தவேண்டிய பணத்தைக்கொடுக்காததாலேயே ஐ. நாவுக்கு நிதிநெருக்கடி ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (எ)

## பிரேஸிலில் இராணுவத் தளபதி பதவிநீக்கம்!

சாஓபாலோ, ஜூன்18

பிரேஸில்நாட்டு இராணுவத்தின் பிரதம தளபதி பிரிகேடியர் சமரினோ பதவிநீக்கம் செய்யப்பட்டார்.

ஜனாதிபதி அவரைப் பதவிநீக்கஞ் செய்தார்.

பத்திரிகை ஒன்றுக்கு பிரிகேடியர் அரசு நடவடிக்கைகளைக் கண்டித்து பேட்டி ஒன்று கொடுத்திருந்தார்.

அதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சம்பளம் போதியளவு வழங்கப்படாத காரணத்தினால் விஞ்ஞானிகள் வேலைசெய்ய மறுக்கிறார்கள். அதனால் அரசின் விண்வெளி ஆராய்ச்சி தடைப்படுகின்றது— இப்படி பிரிகேடியர் சமரினோ பேட்டியில் கூறியிருந்தார். (எ)

## சமய சந்நிதிகளில்

### பருத்தித்துறை சிவன்கோவில் கொடியேற்றம்

பருத்தித்துறை,ஜூன்19

பருத்தித்துறை சிவன் கோவில் கொடியேற்றம் எதிர்வரும் 1ஆம் திகதி திங்கட்கிழமை பகல் 11 மணிக்கு நடைபெற உள்ளது.

கடந்த 7 ஆம் திகதி நடைபெறவிருந்த இந்தக் கொடியேற்ற உற்சவம் நாட்டு நிலைமை காரணமாக இடை நிறுத்தப்பட்டிருந்தன. (சி)

### வெள்ளெருவைப் பிள்ளையார் உற்சவம்

கோப்பாய். ஜூன். 19

கோப்பாய் தெற்கு வெள்ளெருவைப் பிள்ளையார்கோவில் வருடாந்த உற்சவம் நாளை 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். இந்த உற்சவத்தில் 28 ஆம் திகதி செவ்வாய் கிழமை தேர்த்திருவிழாவும், 29 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (சி-72)

### தலங்காவற் பிள்ளையார் மகோற்சவம்

திருநெல்வேலி, ஜூன்19

திருநெல்வேலிதலங்காவற்பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை 20 ஆம் திகதி திங்கட்கிழமை பகல் 11மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

ஜூலை 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தேர்த்திருவிழாவும், 4ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

### மனோன்மணி அம்பாள் உற்சவம்

கொக்குவில் – நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைகொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

28 ஆம் திகதி செவ்வாய்கிழமை தேர்த்திருவிழாவும், 29 ஆம் திகதி புதன்கிழமைதீர்த்தோற்சவமும் நடைபெறும்.

### ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் வருடாந்த உற்சவம்

உடுவில் ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் 20 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

## எழில் மிகு தேரை----

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

நிறுவிய 'வின்ஸர் ஆர்ட் கிளப்பில் சித்திரமும் கற்றுத்தேறிய தம்பித்துரை 1955 இல் சித்திர ஆசிரியராக நியமனம் பெற்றார்.

பதின்மூன்று ஆண்டுகள் மகாஜனக் கல்லூரியில் கடமையாற்றினார்.

ஆசிரியத் தொழிலோடு தமது குலத் தொழிலையும் விடாது செய்து வந்தார் தம்பித்துரை.

இவை தவிர கலைத்துறை ஆராய்ச்சியிலும் ஈடுபட்டார். 'ஓவியக் கலை' 'சிறுவர் சித்திரம்' 'கலாயோகி ஆனந்த குமாரசுவாமி' யாழ்ப்பாணத்துப் பிற்காலச் சுவரோவியங்கள்' என்ற நூல்களும் பல கட்டுரைகளும் அதன் பெறுபேறு என்று சொல்லலாம்.

1968 இல் திரு. ஆ. தம்பித்துரை சித்திர வித்தியாதரிசியாக நியமிக்கப்பட்டார்.

இவ்வுயர் பதவி கிடைக்கு முன்னரே 'கலாகேசரி' என்ற பட்டம் அவரைத்தேடி வந்தது. நந்தாவில் அம்பாள் தேரை உருவாக்கிய 34 வயதான இளைஞர் தம்பித்துரைக்கு திரு. ம. ஸ்ரீகாந்தா சூட்டிய அப்பட்டமே நிலைத்துவிட்டது.

ஒரு தேரைப்போல் இன்னொரு தேரையைச் செய்யும் வழக்கம் கலாகேசரியிடம் கிடையாது புதுமையை நாடுபவர் அவர். 62 சிற்ப வடிவங்களுடன் கூடிய சுதுமலை அம்பாள் தேர், முகபத்திரத்தோடு கூடிய திராவிட மரபிலான துர்க்கையம்மன் தேர் அந்திர மரபிலான கொக்குவில் கிருபாகர சுப்பிரமனிய தேர் லேசார மரபிலான குப்பிழான் கற்கரை விநாயகர் தேர் என்பன இவர் படைப்புக்களுக்குள் குறிப்பிடத்தக்கவை.

கோண்டாவில் வடக்கு சிவபூதவராய சுவாமி கோயிலுக்கு இவர் இன்று செய்தளிக்கும் தேர் வட இந்திய நாகர மரபு தழுவியது. பஞ்சதளத்தோடு ஈழத்தில் செய்யப்பட்ட முதல் தேர் என்ற பெருமைக்கும் உரியது.

இத்தேரைச் செய்த ஆ. தம்பித்துரை அவர்களுக்கு மேற்படி தேர்த் திருப்பணிச் சபை 'கலாபூஷணம்' என்ற பட்டமும், பதக்கமும், பாராட்டும் அளித்து கௌரவிக்கிறது. ★

## அருள்மிகு

(5-ம்பக்கத்தொடர்ச்சி)

யத்தின் வளர்ச்சிக்காய் தொண்டாற்றியவருமான அமரர் செ. இராசசிங்கம் (லாறி) அவர்கள் நாகரமரபில் அமைந்த பஞ்சதள சித்திரத் தேர் ஆகும்,

இதனைச் செய்து நிறைவேற்றுவதற்கு ஐந்து ஆண்டுகள் ஆகின. இன்று வெள்ளோட்ட விழா கோலாகலமாக நடைபெறுகின்றது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சேட்டிங் ★ சூட்டிங்ஸ்
★ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
★ றெடிமேட் ஆடைகளுக்கும்
யாழ்நகரில்
மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

# உதயன்

19 - 06 - 1988 ஞாயிற்றுக்கிழமை

● மணிப்புரி ● பெனரஸ்
● காஞ்சிபுர
சேலைகளைப் பெற்றுக்கொள்ள
மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை, :-: யாழ்நகர்.

## நிதி நிறுவன...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
விட்டிருக்கிறது.

இந்த வகையில் ஏற்கனவேசிலநிதிநிறுவனங்களுக்கு எதிராக மத்திய வங்கி நடவடிக்கை எடுத்திருப்பது தெரிந்ததே.

தற்போது த யூனியன் ட்ரஸ்ட் அன் இன்வெஸ்ட்மென்ட் (யூ. ரி. ஐ.) லிமிட்டட்டின் செயற்பாடுகளை மத்திய வங்கியின் நாணயசபை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த வியாழன் விசேட வர்த்தமானி மூலம் மத்திய வங்கி இந்த நடவடிக்கைபற்றி அறிவித்தது.

இதுதொடர்பாகமத்திய வங்கியின் துணை ஆளுநர் திரு. ஏ. எஸ். ஜெயவர்த்தன நேற்றுத் தாம் கூட்டிய பத்திரிகையாளர் மாநாட்டில் கூறியதாவது:

இந்த நிறுவனத்தின் முகாமைத்துவத்தையும் நிர்வாகத்தையும் மத்திய வங்கி பொறுப்பேற்றுக் கொள்கிறது.

இந்த நிறுவனத்தின் விவகாரங்களைக் கவனிக்க தனி நிறுவனம் ஒன்று அல்லது தனி நபர் ஒருவர் நியமிக்கப்படுவர்.

அவசரகாலப் பிரமாணங்களுக்கு அமைய மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள புதிய அதிகாரங்களைப் பயன்படுத்தியே அந்த நிறுவனத்தின் நிர்வாகம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

நிதி நிறுவனங்களில் பணவைப்புச் செய்பவர்களைப்பாதுகாப்பதில்மத்திய வங்கி உறுதியாக உள்ளது.

நிதி நிறுவனங்கள் தொடர்ந்து இயங்குவதற்கும் இந்த அதிகாரங்களை மத்திய வங்கி பயன்படுத்தும்.

நிதி நிறுவனங்களில் காணப்படும் நிர்வாகச் சீர்கேடுகளுக்கு பொறுப்பானவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வது உட்பட கூடுதல் அதிகாரங்கள் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளன.

நிதி நிறுவனங்கள் திறமையாக நிர்வகிக்கப்படுவதை உறுதிப்படுத்த மத்திய வங்கி திடசங்கற்பம் பூண்டுள்ளது என்பதை இந்த நடவடிக்கை எடுத்துக்காட்டுகிறது.

இப்படி அவர் கூறினார். (உ-எ)

### கொடியேற்றம்

அச்சுவேலி ஜூன் 19

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசாமி கோவில்வருடாந்த மகோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 26 தினங்கள் உற்சவங்கள் நடைபெறும். (ஒ - 11)

கோமாரி அபாயம்:

## தடுப்பு மருந்து ஏற்றும் பணி தாமதம்

### மாதிரிகள் லண்டனுக்கு

யாழ்ப்பாணம் ஜூன் 19

வடக்கில் கால்நடைகளுக்கு பரவி வரும் கோமாரி நோய்க்கான தடுப்பு மருந்து ஏற்றும் நடவடிக்கை தாமதமாகும்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பகுதி கால்நடை வைத்தியர் டாக்டர் ரி. வர்ணலிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார்.

தற்பொழுது எமக்கு வழங்கப்பட்டுள்ள தடுப்பு மருந்துகள் கட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வழங்கப்பட்டுள்ளன. எனவே இவற்றை நாம் வீண் விரயம் செய்யமுடியாது.

நாம் அனுப்பி வைத்துள்ள மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு முடிவுகள் "இது கோமாரி நோய்தான்" என உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடமுடியும்.

இதுவரையில் இந்த நோய் இலங்கையில் இல்லாத காரணத்தால் அனுப்பப்பட்ட உடலுறுப்பு மாதிரிகளைக் கொண்டு கன்னொருவ கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் இந்த ஆய்வுகளை மேற்கொள்ள முடியவில்லை. ஆனாலும் அந்த மாதிரிகள் தற்பொழுது லண்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனவே இந்த மாதிரிகளின் ஆய்வு முடிவுகள் வெளிவந்த பின்னரே இதற்கான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளோம். இதற்கு ஒரு சில வாரங்கள் தாமதம் ஏற்படலாம்.

இவ்வாறு டாக்டர் வர்ணலிங்கம் தெரிவித்தார். (ஒ - 9)

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும், வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்:- 4-5-1933
மறைவு:- 20-5-1988

**திரு. சதாசிவம் சத்தியமூர்த்தி**
(Deputy Commissioner of Prisons)

எம் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனை வேண்டுகின்றோம். எம் கவலையில் பங்கு கொண்டவர்களுக்கும், எல்லாவகையிலும் உதவி நல்கிய அனைவர்க்கும் எமது நன்றி.

அன்னாரது ஆத்மசாந்திக்காக 19-06-1988 இன்று நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், **நண்பர்களை** கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னாரது குடும்பத்தினர்
107, A. V. வீதி,
அரியாலை [4490]

### வடக்கு....

தாகவும் மேலும் அறிய வருகிறது.

இந்தியா நம்புவது போல இணக்க நிலை உருவானால், வடக்கு-கிழக்கு இணைந்த மாகாணசபை குறித்த அறிவிப்பும், நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்வது பற்றிய அறிவிப்பும் ஒரே நாளில் வெளியிடப்படலாம் என்று இங்குள்ள அரசியல் ராஜதந்திர வட்டாரங்கள் இப்போது ஊகம் தெரிவிக்கின்றன. (அ-உ)

## காணமற் போன....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கடந்த வெள்ளிக்கிழமை இளவாலையைச் சேர்ந்த சிறுவன் சுன்னாகத்தில் கண்டுபிடிக்கப்பட்டான். அவரிடம் அவரது சகா பற்றி விசாரிக்கப்பட்டது.

அப்போது சிறுவன் கூறியதாவது:-

"நானும் முருகதாஸும் பாடசாலையை விட்டு வெளியேறி தெருவிலே சில நாட்கள் அலைந்து திரிந்தோம்.

ஒருநாள்பசிக்கொடுமை தாங்காது இருவரும் ஒரு மாம்பழ வியாபாரியின் மாம்பழத்தை திருடிவிட்டோம். இதனை மாம்பழ வியாபாரி கண்டுபிடித்து விட்டார்.

நான் ஓடித் தப்பி விட்டேன் முருகதாஸ் அவரிடம் பிடிபட்டு விட்டான்" என்றான்.

இதேவேளை இச்சம்பவம் நடந்த இடம் எது என்று சிறுவனுக்குத் தெரியாது என்ற காரணத்தினால் தற்பொழுது அனாதை இல்ல நிர்வாகிகளும். உறவினரும் பழ வியாபாரி பற்றியதகவல்களை அறிய முற்பட்டுள்ளனர்.

இது பற்றி யாழ். பொலீஸ் பிரிவிலும் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது. (ஒ-9)

### செவ்வாய்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
ஏற்பாடாகி இருந்து. அப்போதைய வன்செயல்களினால் தடைப்பட்ட பரீட்சையே நாளை மறுதினம் ஆரம்பமாகிறது.

அப்போது தோற்ற முடியாமல்போன தமிழ் மாவட்டங்களின் மாணவர்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## யாழ் பஸ் நிலைய......

(1ம் பக்கத் தொடர்ச்சி)
மையும் பலவருடங்களாக தொடர்ந்த வண்ணமுள்ளன். இந்நிலை மாறவேண்டும்.

தமிழ்ப்பகுதிகளில் அமைதியும் சமாதானமும் நிலவவேண்டும் என்ற நோக்கத்திற்காக பல அமைப்புக்களும் தொடர்ச்சியாக வேண்டுகோளையும், போராட்டங்களையும் மேற்கொண்டுவருகின்றன,

இந்த வகையில் மீண்டும் ஒருமுறை பொது மக்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்த ஒரு சந்தர்ப்பம் உருவாக்கப்பட்டுள்ளது.

நாம் கேட்பதெல்லாம் இதுதான். பல்வேறுபட்ட வழிகளிலும் தமிழ்ப்பகுதிகளிலும பயன்படுத்தப்பட்டு வரும் ஆயுதப்பயன்பாடு உடன் நிறுத்தப்பட வேண்டும். சகல தரப்பினரும் சமாதானத்தை நிலைநிறுத்த முன்வர வேண்டும்.

இவ்வாறு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

### ஜோலி ஸ்ரார்ஸ் சாம்பியன்

யாழ்ப்பாணம். ஜூன் 19

பிள்ளையார் சுற்றுக்கிண்ணத்திற்காக யாழ். ஜொலியன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய கிரிக்கெட் போட்டியில் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழக அணி சாம்பியனானது.

நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஜொனியன்ஸ் அணியை, ஜொலிஸ்ரார்ஸ் அணி வென்றது. (ஒ-க)

இப்போது காமதேனுவின் புதிய நிர்வாகத்தில்

**நியூ கிறீன் பீக்கிங் பலஸ்**

சைனீஸ் உணவுப் பிரியர்கள் தினமும் நாடுமிடம்

**நியூ கிறீன் பீக்கிங் பலஸ்**

பகலெல்லாம் பாடுபடும் நீங்கள் உங்கள் உடல் களைப்பை உடன் போக்கிக்கொள்ள சிக்சன் சூப், மட்டன் சூப், மரக்கறி சூப் இவை மட்டுமா?

நூடில்ஸ், புரியாணி, றைஸ் கறி, டெவல் பீவ், மட்டன் பீவ் இவற்றிற்கு இதமாக வெளிநாட்டு, உள்நாட்டு மதுபான வகைகள் குறைவே இல்லாத நிறைவான உபசரிப்பில் காலை முதல் இரவு வரை உங்கள் வரவிற்காக திறந்திருக்கும்.

அறு சுவையின் முகவரியை அறிந்து கொள்ளுங்கள் காரணம்! இன்று மாலை உங்கள் நண்பர்களுடன் சேயர்ஸ்.

**நியூ கிறீன் பீக்கிங் பலஸ்**

69, 4 ஆம் குறுக்குத் தெரு,
சின்னக்கடை,
யாழ்ப்பாணம்.

விளம்பர அமைப்பு;- ஷன் அட்வடைசிங் சேவிஸஸ், பஸ் நிலையம்.

(4616)

**Professional Examinatons City and Guilds of London Institute**

627- Quantity Surveying 1989

வகுப்புக்கள் 01- 07- 1988 தொடக்கம்

**ATLAS Institute**

திருநெல்வேலியில் நடைபெறவுள்ளன.

வகுப்புக்கள் தொடங்கும் திகதிகள்
627- 1 Part I Measurement of Building work -04- 07- 88
627- 2 Part II Measurement 1- 7- 88
627- 2 Part II Estimating and Analysis of Prices 06- 07- 88

வகுப்புக்கள்யாவும் காலை 6.30-8.30 வரை நடைபெறும். 30-06-88 திகதிக்கு முன்பு அனுமதி அட்டையைப் பெற்றுக் கொள்ளவும்.

(4617)

### 9வது ஆண்டு நினைவஞ்சலி



முதலியார் வை. மகேசனின் பாரியார் இராசமணி

தோற்றம்: 2 - 2 - 1909
மறைவு: 19 - 6 - 1979

ஆண்டுகள் பல சென்றாலும் உங்கள் நினைவுகள் எமது மனதை விட்டு நீங்கா.

அன்பு மறவாத
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் சகோதரர், உறவினர், நண்பர்**

"லிங்கவாசா"
நவாலி. (4607)

★ ஷப்ரு ★

யூனிக்கோ பினன்ஸ் லிமிட்டெட் வழங்கும் நிலையான முதலீட்டுத் திட்டம்




**புதிய வட்டி விபரங்கள்**

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | ... | 14 வீதம் |
| 6 மாதங்கள் | ... | 16 வீதம் |
| 12 மாதங்கள் | 16 வீதம் | 18 வீதம் |
| 24 மாதங்கள் | 18 வீதம் | 20 வீதம் |
| 36 மாதங்கள் | 20 வீதம் | ... |

உங்கள் வசதிக்கேற்ப பின்வரும் வழிகளில் வட்டியினைப் பெற்றுக்கொள்ளலாம்.

★ பணமாக ★ காசோலையாக ★ வங்கிக் கணக்கூடாக

**நிறுவனத்தின் நிதி நிலை விபரம்**

| | 1984 —> 85 | 1985 —> 86 | 1986 —> 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,425,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1,791,516 | 8,283,816 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரிசெலுத்து முன் தேறியலாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்திய பின்தேறியலாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

இயக்குநர் சபை

எஸ். பாலசுப்பிரமணியம், A. I. B (Lon)
ஸீ. பி. ஈ. கருணாரட்ண, (சட்டத்தரணி)
ஜே. டி. நவரட்ணம், A. I. B (Lon)
ஆர். பாலசுப்பிரமணியம்,
ஓ. சி. எம். ஹசன்பாரி, B. A.

மேலும் தகவல்களைப் பெற எமது அலுவலகத்துடன் நேரடியாகவோ அல்லது கடித மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

**ஷப்ரு நிதி நிறுவனம்**

Shabra Unico Finance Limited,
61, New Bullers Road,
COLOMBO - 4.
Telephone: 589310, 500576.

யாழ் முகவர்,
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22073.

இப்பத்திரிகை நியு உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 19- 06- 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது, printed and published by New Uthayan publications(pvt) Ltd. 92/2, Navalar Road, Jaffna on Sunday 19th June 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org